சென்னை வியாபாரி

என்கிற

தென்னிந்தியா வர்த்தக ஜர்னல்

புஸ்தகம் 1. Vol. I. | பிரமாதீச ௵ சித்திரை௴ 12௳. 1913௵ ஏப்பிரல்௴ 24௳ | ஸஞ்சிகை 2. No. 2.

English Hand-made Lace.

இங்கிலாந்துதேசத்து கையினால் செய்யப்பட்ட சரிகை.

இங்கிலாந்து தேசத்தில் சரிகை கைத்தொழில் ஆதிகாலத்தில் மும்மரமாக நடந்துவந்தது. ஆனால் ஆதரிப்பின்றி வரவர நசித்துவந்து அத்தொழிலே இறந்துபோகும்படியான நிலைமையிலிருந்தது. ஆயினும் 20 வருஷங்களுக்கு முந்தி அத்தொழிலை புதிப்பிக்க ஒரு பிரயத்தனம் ஆரம்பிக்கப்பட்டது. லண்டன் முனிசிபாலிட்டியாரும், சில வர்த்தக கம்பெனியார்களும், இன்னும் சில பிரபுக்களும் உதவி செய்ய தயாளகுணத்துடன் முன் வந்தார்கள். சரிகை வேலை செய்பவர்கள் அத்தொழிலை நிறுத்தாமல் தொடர்ந்தேர்த்தியாக வேலை செய்துவரும்படி அவர்களுக்கு உதவி புரிய ஆங்காங்கு கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டன. சரிகைத்தொழில் நசித்துவந்ததற்கு இரண்டு காரணங்கள். அவையாவன :—(1) சரிகை தயார் செய்தால் அது கிரையமாகிறதில்லை. (2) அதில் நேர்த்தியான வேலைப்பாடு அமைந்திருக்கிறதில்லை. இந்த கமிட்டியார் இந்த இரண்டு காரணங்களையும் கண்டு விலக்கித் தொழிலை புதிப்பித்து வந்தார்கள். இந்த கமிட்டியாருடைய பிரயத்தனத்தால் செய்யப்பட்டுவரும் சரிகை வரவர உன்னதமான வேலைப்பாடு அமையப் பெற்றிருப்பதை முன்னிட்டு நாளுக்கு நாள் கிராக்கிகளும் வரத்தலைப்பட்டன. இப்போது இங்கிலாந்துதேசச் சரிகைக்கு எதேஷ்டமான கிராக்கியிருக்கிறது. இக்கைத்தொழில் பலப்பட ஆங்காங்கு சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டன. இந்தச் சங்கங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து சென்ற மார்ச்சு௴ ஆரம்பத்தில் லண்டன் மான்ஷன் அவுஸ் மாளிகையில் கையினால் செய்யப்பட்ட சரிகைக் காக்ஷி ஒன்று நடத்தின ; மகாநேர்த்தியான வேலைப்பாடு அமைந்த சரிகைகளும், மகா விலையுயர்ந்த சரிகைகளும் அந்த காக்ஷிக்கி வந்திருந்தன. இங்கிலாந்துதேச கைத்தொழில் அபிவிர்த்தியில் மேரிசக்கரவர்த்தினியார் அவர்கள் மிகவும் பற்றுடையவர்களானபடியால் தங்கள் வச மிருந்த உயர்ந்த வேலைப்பாடு அமைந்த சரிகைகளையும் காக்ஷிக்கி அனுப்பி யிருந்ததுமன்றி அவர்களும் விஜயம் செய்திருந்து சில நேர்த்தியான சரிகை பொருள்களுக்கு உத்திரவு செய்தார்கள். இந்த காக்ஷியைப் பார்த்தவர்கள் எல்லாம் சரிகை இனி இங்கிலாண்டு தேசத்தார் வெளிதேசத்தாரிடமிருந்து வரவழைக்க வேண்டிய அவசியமில்லை என்று அபிப்பிராயப்பட்டார்கள். 32 ஜில்லாக்களிலிருந்தும் பிரதிநிதிகள் தங்கள் தங்கள் ஜில்லாவில் தயார் செய்யப்பட்ட சரிகையைக் கொண்டுவந்திருந்தார்கள்.

சரிகைத்தொழில் இங்கிலாந்தில் அநேக ஜனங்களுக்கு பிழைப்பாதாரமாயிருக்கிறது. 12 வயதில் தொழில்கற்க ஆரம்பிக்கிறார்களாம். 70 வயது வரையில் அதே தொழிலைச்செய்து சுபிக்ஷமாய் வாழ்ந்து வருகிறார்களாம். பெரும்பாலும் வேலை செய்கிறவர்கள் ஸ்திரீகளே.

The Hon'ble Mr. P. S. Sivaswamy Aiyer on the Benefits of Agricultural Co-operation.

விவசாயத்தில் ஐக்கியநாணயசங்க முயற்சியால் உண்டாகக்கூடிய நன்மைகளைப்பற்றி ஆனரபில் மிஸ்டர் P. S. சிவசுவாமி அய்யர் பேசினது.

சென்ற மார்ச்சுமீ 23உ மதுரையில் கூடிய வருஷாந்திர மதுரைஜில்லா கோவாப்பரேட்டிவ் கூட்டத்தில் ஆனரபில் மிஸ்டர் P. S. சிவசுவாமி அய்யர் அவர்கள் விவசாயத்தொழிலில் ஜனங்கள் கூட்டுணர்ச்சி காட்டி வேலைசெய்தால் அனேக நன்மைகளுண்டாகு மென்று அடியிற்கண்டபடி பேசினர்:—

"ரயத்துகள் தங்களுடைய நிலங்களுக்கு எருக்கள் மிகுந்த நயமான விலைகளுக்கு வாங்கலாம். விரையும் கால்நடைகளையும் வாங்கலாம். நெல்லின்விலை இறங்கியிருக்கும்போது கிஸ்தி வாயிதா முடைக்காக நெல்லை விக்கிரயம்செய்து நஷ்டமடையவேண்டியதில்லை. ஏன் என்றால் கிராமத்தில் ஏற்பட்டிருக்கும் விவசாயசங்கத்தில் தானியத்தை அடமானம் வைத்து தேவையான பணத்தை வாங்கிக்கொண்டு விலைஏறி நிற்கும்போது விற்கலாம். சில ரயத்துகள் ஒன்று சேர்ந்து சர்க்கரை ஆலை வாங்கலாம். சர்க்கரை அல்லது கருப்பட்டி தயார் செய்து உற்பத்தி செய்யும் ரயத்துகளுக்கும் வாங்கிச் சாப்பிடும் ஜனங்களுக்கும் மத்தியிலிருக்கும் நடுமனிதன் அடித்துக்கொண்டுபோகும் லாபத்தை அவர்களே அடையலாம். பிரஸ்தாப மதுரை ஜில்லாவும் இன்னும் சில ஜில்லாக்களும் செழிப்பாயிராமலிருப்பது ஜில்லாவின் பூசாரத்தாலல்ல; சாகுபடி செய்வதற்கு போதுமான ஜல வசதிகள் செய்யப்படாமலிருப்பதே! சில ரயத்துகள் ஒன்று சேர்ந்து ஆயில் இன்ஜின்கள் வாங்கி கிணற்று ஜலத்தை இறைக்கச்செய்து நிலங்களுக்கு பாய்ச்சி வைத்தால் சாகுபடியின் நன்மைக்கு ஒரு எல்லையுமுண்டோ? தனவந்தர்களாக விருக்கும் ரயத்துகள் தங்களுடைய விவசாயத்தொழிலுடன்கூட அத்தொழிலுடன் சமீபநெருக்கமுடைய ஒரு தொழிலையும் வைத்துக்கொள்ளலாம். உதாரணமாக விசேஷ தென்னைப் பயிர் செய்யும் ரயத்துகள் கயிர் செய்யும் தொழிலும் வைத்துக்கொள்ளலாம். இப்படிச் செய்வார்களேயானல் இப்போதைவிட விசேஷப்பணம் சம்பாதிக்கலாம். இப்பேர்பட்ட தொழில்களுக்கு என்னவிதமான கோவாப்பரேட்டிவ் சங்கங்கள் ஏற்படுத்தவேண்டுமென்று நான் சொல்லக்கூடாது. இது விஷயத்தில் பற்றுடைய ஜனங்களும், கோவாப்பரேட்டிவ் ரெஜிஸ்டிராரும் கலந்து யோஜனை செய்து ஜில்லா நிலைமையையும் உத்தேசித்து ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

Dewan Bahadur L. D. Swamikannu Pillai on Co-operation.

ஐக்கிய நாணயசங்கங்களால் உண்டாகும் நன்மையைப்பற்றி திவான் பகதூர் எல். டி. சாமிக்கண்ணுப்பிள்ளை பேசினது.

சென்னை ராஜதானியின் ஐக்கிய நாணயசங்கங்களின் ரெஜிஸ்டிராருகிய திவான் பகதூர் எல். டி. சாமிக்கண்ணுப்பிள்ளை அவர்கள் மதுரையில் மார்ச்சுமீ 25உ ஐக்கிய நாணயசங்கங்களால் உண்டாகக்கூடிய நன்மைகளைப்பற்றி ஒரு உபன்னியாசம் செய்தனர்.

கிராமாந்திரங்களில் பெரும்பாலும் பள்ளிக்கூட உபாத்தியாயர்களே ஐக்கிய நாணயசங்கங்களை மானேஜ்மெண்டு செய்து வருகிறபடியால் முதலில் அவர்கள் ஐக்கியத்தின் கொள்கையைப்பற்றியும் நன்

மையைப்பற்றியும் நன்றாய் தெறிந்துகொண்டிருக்கவேண்டும். ஐக்கிய நாணயசங்கங்களின் பிரதமகருத்து என்னவென்றால் ஏழை பணக்காரனால் உதவி செய்யப்படுவதைக்காட்டிலும் ஏழையாலேயே உதவி. செய்யப்படக்கூடுமென்பதே. இந்தக் கருத்தை இத்தேசஜனங்கள் ஒப்புக்கொள்ளுவதற்கு சிலகாலம் செல்லுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஏன் என்றால் இத்தேசஜனங்கள் வெகுகாலமாக தருமத்தின்பேரில் வெகுவாய் நம்பிக்கை வைத்து வந்தவர்கள். அயோக்கியர்கள் ஐக்கியநாணயசங்கங்களில் சேர்ந்து அபாயம் கொண்டுவருவார்கள் என்கிற பயமே கிடையாதென்றும், சென்னை ராஜதானியிலிருக்கும் ஐக்கியநாணயசங்கங்களில் 60 ஆயிரம் மெம்பர்களிருக்கிறார்கள் என்றும், இவர்களுக்குள் 150 பேர்வழிகளுடைய கடன்கள்மட்டிலும் வசூல் செய்யப்படக்கூடியதாயில்லை என்று கணக்கு எழுதும்படி நேரிட்டதென்றும் சொன்னார். சேலத்தில் முனிசிபாலிட்டி தெருவுக்களைப் பெருக்குகிறவர்களுக்கும் தோட்டிகளுக்கும் உதவி செய்யும் பொருட்டு ஒரு ஐக்கியநாணயசங்கம் ஏற்படுத்தப்பட்டதென்றும், அவர்கள் கேவலமானவர்களாகவிருந்தபோதிலும் அந்த சங்கம் செவ்வையாக நடைபெற்று வருகிறதென்றும் சொன்னார்.

கவர்ன்மெண்டார் நிலத்தை விர்த்திசெய்யக் கடன்கொடுக்கவும் (Land Improvements Act) விவசாயிகள் பரிகார ஆக்ட் (Agriculturist Relief Act) ஏற்படுத்தி சாமார்த்தியமுடையசிப்பந்திகளையும் நியமித்து ரயத்துகளுடைய கஷ்டங்களை விலக்கப் பிரயத்தனப்பட்டு வந்தார்கள். அந்த சிப்பந்திகள் செய்தவேலையையும் ஐக்கிய நாணயசங்கங்கள் செய்திருக்கும் வேலைகளையும் சீர்தூக்கிப்பார்த்தால் ஐக்கியசங்கங்களே ரயத்துகளுடைய கஷ்டங்களை நீக்கியிருக்கின்றனவென்று சொன்னார். ஐக்கியநாணயசங்கங்கள் ஏற்படுத்த சில கிராமங்களிலிருந்து வந்த மனுக்கள் கவனிக்கப்படவில்லை என்று தமக்கு சட்டசபையில் ஒரு கேள்வி போடப்பட்டதென்றும், அந்த மனுக்கள் சம்பந்தமாக விசாரணை செய்து பார்த்ததில், அந்த மனு அனுப்பியவர்கள் ஏதேஷ்டமான கடன்பட்டவர்கள் என்றும், அவர்கள் சுயப்பிரயோஜனத்தை நாடி கவர்ன்மெண்டாரிடமிருந்து சொற்பவட்டிக்கு கடன் வாங்கி தங்களுடைய கடன்களைத் தீர்த்துக்கொள்ளலாமென்று நோக்கங்கொண்டு சில கிராமத்தார்களிடமிருந்து கையெழுத்து வாங்கி மனு அனுப்பியிருக்கிறார்களே யொழிய மற்றபடி அப்பேற்பட்ட சங்கங்கள் உண்டானால் அவைகள் நடைபெறமாட்டாவென்றும் கடன் கொடுத்து உதவி செய்த கவர்ன்மெண்டாரும் நஷ்டப்படுவார்கள் என்றும், இந்தக் காரணங்களைப்பற்றி அந்த மனுக்கள் கவனிக்கப்படவில்லை என்றும் பதில் சொன்னார். தன் முயற்சி, தன்னடக்கம், சுயபரிபாலனம் ஆகிய இந்த மூன்று அம்சங்கள் பொருந்தியிராத ஜனங்கள் அடங்கிய சங்கம் ரெஜிஸ்டர் செய்யப்படுவதில் பயன்படாது என்று சொன்னார். இத்தேசஜனங்கள் நீண்டகாலமாக சுயபரிபாலனம் தங்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று நினைத்தும் பேசிக்கொண்டும் கனவு கண்டும் வருகிறார்கள். கவர்ன்மெண்டார் ஜனங்களுடைய இந்த விருப்பத்தை ஆதரிக்கவேண்டுமென்றும் அனேக உபாயங்கள் செய்துவருகிறார்கள். அவற்றுள் ஐக்கியநாணய சங்கங்களின் ஏற்பாடு ஒன்று. இந்த கருத்துடன்தான் ஷை சங்கங்களின் மெம்பர்களே அவைகளை நடத்திக்கொண்டு வரும்படியாக விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்று சொல்லி உபன்னியாசத்தை முடித்தார்.

Improvement of Cotton Crop.

பருத்திப் பயிர் விருத்தி.

மதுரை கோவாப்பரேட்டிவ் சங்கத்தின் வருஷாந்திரக்கூட்டத்தில் விவசாய இலாக்கா டிப்டி டைரக்டராகிய மிஸ்டர் H. C. சாம்ப்சன் பருத்திப் பயிர் விருத்தியைக் குறித்து அடியிற் கண்டபடி பேசினார் :—

ஐக்கியநாணய சங்க முயற்சியால் பருத்திப்பயிரையும் விருத்திசெய்யலாம்; பயிரும் அதிகப்படும்படி விருத்திசெய்யலாம்; நல்லதினுசான மாசூலும் அடையும்படி செய்யலாம். நல்லதினுசான மாசூல் கிடைக்கவேண்டுமானால், நல்லவிதை விதைக்கவேண்டும். இப்போது ரயத்துகள் அவர்களுடைய மாசூலை வாங்குகிறவர்கள் கொடுக்க இஷ்டப்படுகிற விதை

களை விதைத்து வருகிறார்கள். நல்ல விதைகளை விதைத்து நல்ல பயிர்கள் உண்டாக்கினால் ரயத்துகளுக்கும் நல்ல லாபம் உண்டாகும். அம்மாலை வாங்கும் கம்பெனியார்களும் லாப மடைவார்கள். நான் மிகவும் முக்கியமாய்ச் சொல்லுவ தென்னவென்றால், ரயத்துகள் இது விஷயத்தில் விவசாய இலாக்காக்காரர்களுடன் கலந்து வேலைசெய்யவேண்டும். கவர்ன்மெண்டார் விவசாய இலாக்கா மூலியமாக நல்ல தினுசான பயிர் உண்டாக்கப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் சில கிராமங்களில் கவர்ன்மெண்டார் கருங்கண்ணி (Karunganni cotton seeds) பஞ்சு விதையை பட்டுவாடாசெய்து வந்தார்கள். இந்த விதையின் நன்மையை உணர்ந்த ஜனங்கள் இந்த விதையையே உபயோகித்து வந்திருந்தால் திருநெல்வேலிஜில்லா முழுதிலும் கருங்கண்ணி பஞ்சு மாகாணமாகப் போய்விடும். இலாக்காக்காரர்கள், கோவில்பட்டி விவசாயப்பண்ணையில் கருங்கண்ணியைவிட உயர்ந்தவிதை கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த விதையால் எதேஷ்டமான மாசூல் கிடைப்பதுமன்றி கொட்டைகளை அடித்துவிட்டால் இப்போதுபோல 100-க்கு 25 தேறாமல் 100-க்கு 28 தேறுகிறது. 2000 ஆயிரம் கப்பாக்களுக்கு (Kappas) இப்போது போல் 500 ராத்தல் பஞ்சு கிடைக்காமல் 560 ராத்தல் கிடைக்கிறது. அதாவது அரைக்கால்பேல் அதிகமாககிடைக்கிறது. பேல் (Bale) ஒன்றுக்கு ரூ. 160 கிரையம் விகிதம், ஒவ்வொரு 2000 ராத்தலுக்கு ரூ. 20 அதிகலாபம்கிடைக்கிறது. இன்னும் விபரமாகச்சொல்லப்போனால் 12 துலாம் கொண்ட ஒரு பொதிக்கு ரூ. 2-8-0-க்குமேல் அதிகமாக கிடைக்கின்றது. இந்த விதை, சப்ளை செய்யப்பட்டால் கிராமத்தார்கள் அவைகளை விதைத்து வருகிறார்கள் என்பது என்ன நிச்சயம்? ஓட்டைப் பாத்திரத்தில் ஜலத்தை விடுவதில் என்னபலன்? கண்டுபிடித்துக் காண்பிக்கப்பட்டவும் தனக்குலாபம் கொடுக்கக்கூடிய ஒருமுறையை ஒவ்வொரு கிராமத்தாரும் அனுஷ்டிக்காவிட்டால் அதனால் என்ன பிரயோஜன முண்டாகப்போகிறது? ஆதலால் மாசூல்களுடைய ரகங்கள் உயர்வடைந்து ரயத்துகளும் தகுந்தலாப மடையவேண்டு மென்றால் ரயத்துகள் விவசாய இலாக்காவுடன் கூட்டுறவுகாட்டி உழைத்து வரவேண்டும்.

Agricultural Education.

விவசாயப் படிப்பு.

வைசிராய் சட்டசபையில் ஆனரபில் மிஸ்டர் ரமராயநிகர், 1913-14 வருஷதிட்டக்கணக்கில் கவர்ன்மெண்டார் இந்தியாவில் இருப்புப்பாதை விருத்திக்காக ரூ. 1,51,869,000, கொடுத்திருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு பேசினார். விவசாயப்படிப்பு, பிரைமரிப் பள்ளிக்கூடங்களில் கற்பித்துக் கொடுக்கவேண்டுமென்றும் கீழ்தர வகுப்பாருக்கு (Depressed classes) அதாவது எழுதப் படிக்கத்தெறிந்த பரையர் பள்ளர்களுக்கு கவர்ன்மெண்டு இலாக்காவில் தாழ்ந்த உத்தியோகங்கள் கொடுத்து வரவேண்டுமென்றும் பேசினார்.

The Indian Currency Commission.

இந்திய நாணய கமிஷன்.

இந்தியாவின் நாணயவிஷயமாக ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு விசாரணைசெய்யப் போகிறார்கள் என்று சில மாதங்களாக பிரஸ்தாபமாக விருந்தது. இப்போது அந்த கமிஷனிலிருக்கவேண்டிய மெம்பர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நியமனத்தையும் மாக்ஷிமைதங்கிய மகாராஜா அவர்கள் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். வைசிராய் சட்டசபையில் ஏற்கனவே பிரஸ்தாபிக்கப்பட்டதுபோல இந்த கமிஷனில் சுதேசிகள் எவரும் மெம்பராக நியமிக்கப்படவில்லை. இந்தியா கவர்ன்மெண்டின் பொது கையிருப்புகள் எப்படி மானேஜ்மெண்டு செய்யப்பட்டு, எப்படி வைக்கப்பட்டிருக்கின்றன வென்றும், கவுன்சில் பில்களை லண்டனில் விற்பதைக் குறித்தும், 1898-ம் வருஷத்திய இந்தியன் கரன்சிகமிட்டியார் விசாரணை செய்து சிபார்சு செய்த சிபார்சுகளை நிறைவேற்ற இந்தியா கவர்ன்மெண்டாரும், இந்தியா மந்திரியாரும் என்னஎன்ன ஏற்பாடுகள் செய்தார்கள் என்றும் பொன்கையிருப்பு, பேப்பர்கரன்சி (நோட்டு) கையிருப்பு சம்ப

ந்தமாக இப்போது வழக்கத்திலிருக்கும் நடவடிக்கைகள் இந்தியாவிற்கு அனுகூலமாயிருக்கிறதா என்றும்—ஆகிய இதைப்போலுள்ள விஷயங்களை விசாரணைசெய்ய இந்த கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் உத்தியோகத்திலிருத சுதேசிகள் இந்த கமிஷன் முன்னில் சாக்ஷியம் சொல்ல விரும்பினால் அவர்கள் யார்யார் என்றும் அவர்களுடைய பெயர்கள் என்னவென்றும் அறிவிக்கும்படியாக இந்தியாவிலுள்ள லோக்கல் கவர்ன்மெண்டார்களும், ராஜதானி பாங்குகளும், சேம்பர் ஆப் காமர்ஸ் வர்த்தக சபைகளும் எழுதி கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

PROCEEDINGS OF THE CHAMBERS OF COMMERCE.

சேம்பர் ஆப் காமர்சின் நடவடிக்கைகள்.

Madras Chamber.

சென்னை சேம்பர்.

சேம்பரின் கூட்டம்:—25-2-1913.

இந்தியா சமுத்திர மூலியமாக அகண்ட வியாபாரம் நடத்திக்கொண்டு வருகிறது. ஆதலால் அந்த வியாபாரத்தை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு ஈஸ்ட் இந்திஸ் ஸ்கூர்டன் என்று சொல்லும்படியான கப்பல்படையினுடையது. இந்த கப்பல்படை எண்ணிக்கையில் குறைந்து போயிருப்பதுமன்றி இன்னும் அனேக அம்சங்களில் விர்த்திபடுத்தப்படவேண்டியதா யிருக்கிறது. இந்தக்காரணங்களை முன்னிட்டு யுத்த காலத்தில் ஷை வியாபாரத்திற்கு அபாயமுண்டாகக்கூடியதாயிருப்பதாலும், ஷை அபாயம் வெகுவாய் எதிரியினுடைய கப்பல் சைனிய மூலியமாக எதிர்பார்க்கப்படுகிறபடியாலும், இந்திய சமுத்திரத்தில் ஓடக்கூடிய பிரிடிஷ் வர்த்தக கப்பல்களை பாதுகாக்கும்படியான வலிவுடையதாகவிருக்கும்படி ஈஸ்ட் இந்தியா கப்பல் சைனியம் பலப்படுத்தப்படவேண்டும். இதற்காக இந்தியாவின் அயன் வருமானத்திலிருந்து ஒரு தொகை கொடுக்கப்படவேண்டும். இப்படி இந்தியா உதவி செய்யும் பணம், சமுத்திரப்படை இலாக்காவிற்கு ஏற்கனவே இங்கிலாண்டு கவர்ன்மெண்டாரால் கொடுத்துவரப்படும் தொகையுடன் கூட கொடுத்துவரப்பட்டதாக எண்ணப்பட்டு வரவேண்டுமேயொழிய, இதனால் ஷை கவர்ன்மெண்டார் கொடுத்துவரும் தொகை குறைக்கப்படக்கூடாது. மேலே சொன்னபடி ஈஸ்ட் இந்தியா கப்பல் கூட்டம் பலப்படும்பரியந்தரம் இந்தியாவின் கப்பல் வர்த்தகத்தை பாதுகாக்கும் சில சாதாரண கப்பல்கள் யுத்த கப்பல்களாக விரைவில் மாற்றப்படவேண்டும்.

இப்படி சென்னைச்சேம்பர் ஒரு தீர்மானம் பாஸ் செய்வித்து இந்த தீர்மானம்போல மற்ற சேம்பர்களும் செய்யுமா என்று எழுதி கேட்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் பொன் நாணயம்.

இந்தியாவில் பொன் நாணயங்கள் வழங்கிவரும் ஏற்பாட்டைக்குறித்து மிஸ்டர் வெப்பிடமிருந்தும் காராச்சி சேம்பரிடமிருந்தும் வந்த லெட்டர் வாசித்துக்காண்பிக்கப்பட்டது.

பொன் நாணயங்கள் இந்தியாவில் இயல்பாகவே வழங்கி வரப்படவிடவேண்டுமென்றும், சவரன் அடிப்பதற்காவது அல்லது வேறே எந்தநாணயமடிப்பதற்காவது இந்தியாவில் தங்கசாலை இப்போது ஸ்தாபிப்பதற்கு யாதொரு காரணமு மில்லை என்று தீர்மானிக்கப்பட்டு மிஸ்டர் வெப்பிற்கு அறிவிக்கப்பட்டது.

Southern India Chamber Third Annual Meeting.

தென்னிந்தியா சேம்பர் மூன்றாவது வருடத்திய கூட்டம்.

இதன் மூன்றாவது வருஷாந்திரம் கூட்டம் சென்னபட்டணம் நார்த் பீச்சிலிருக்கும்படியான இந்தியன் சேம்பர் பில்டிங் என்று பெயர் கொண்ட இதன் சொந்தக்கட்டடத்தில் சென்ற மார்ச்சுமீ 30வ செவ்வாய்க்கிழமைதினம் நடந்தேறினது. பெரும்பாலான வியாபாரிகளும், ஏற்றுமதி இறக்குமதி செய்கிறவர்களும் வந்திருந்தார்கள். பிரசிடெண்டு ராவ் பகதூர் P. தியாகராய செட்டியார் அவர்கள் தேக அசௌக்கியத்தை முன்னிட்டு, மீட்டிங்கிற்கு வரமுடியவில்லை. ஆதலால் மெசர்ஸ் ஹாஜிபாக்ஷா சாயப் கம்பெனியார்களைச் சேர்ந்த கான்பகதூர் M. A. குடூஸ் பாக்ஷா சாயப் அவர்கள் பிரசிடெண்டாக நியமிக்கப்பட்டார்கள். இந்த கனவான் அக்கிராசனம் வகித்துக்கொண்ட பின்பு பிரசிடெண்டு மிஸ்டர் செட்டியார் அவர்கள் எழுதி அனுப்பிய பிரசங்கம் அசிஸ்டன்ட் செக்ரிடரி மிஸ்டர் C. துரைசாமி அய்யங்கார் அவர்களால் சபையோருக்குவாசித்துக்காண்பிக்கப்பட்டது. பிரசிடென்ட்டின் பிரசங்கத்தின் சாராம்சம் அடியில் வருமாறு:—சேம்பருக்காக புதிதாக வாங்கப்பட்டிருக்கும் கட்டடத்தைக்குறித்துப் பேசி, சேம்பரின் மூன்றாவது வருஷாந்திரக் கூட்டம் சேம்பரினுடைய சொந்தக்கட்டடத்திலேயே நடக்கும்படியான பாக்கியத்தைச் சேம்பர் பெற்றிருப்பது அதன் மெம்பர்களுக்கும், அதன் க்ஷேமத்தைக் கோருகிறவர்களுக்கும் திருப்தியைக் கொடுக்குமென்றுசொன்னார். இந்த கட்டடத்தைக் கிரயம் பெறும்பொருட்டு சேம்பருக்குச் சொற்பவட்டிக்கு பணம் கொடுத்து உதவியிருக்கும் திவான் பகதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜதாஸ் அவர்களுக்கு சேம்பர் நன்றி பாராட்டக்கடமைப்பட்டிருப்பதாகச் சொல்லி, அந்தக்கட்டடத்தை கிரயம் பெற்றவுடனே அதனுடைய மேல்தளத்தில் சேம்பர் அமர்ந்திருக்க ஒரு உன்னதமான ஹால் கட்டவும் பொருளுதவி செய்திருக்கிறார் என்று சொன்னார். பிரஸ்தாபஹால் கட்டி முடிந்தபின்பு கட்டடத்தின் அடிபாகமும், மெத்தையும் வாடகைக்கு விடப்படுமென்றும், மெத்தையின் பேரில் கட்டப்பட்டுவரும் ஹாலில் சேம்பர் அமர்ந்திருக்குமென்று சொன்னார். இந்தச் சேம்பர் ஜெனனமானமுதல் மெசர்ஸ் ஹாஜிமுகமத் பாக்ஷா சாயப் கம்பெனியார்கள் அவர்களுள் முக்கியமாய் கான்பகதூர் குடூஸ் பாக்ஷா சாயப் அவர்கள் தங்களுடைய கம்பெனியிலேயே சேம்பருக்கும் வாடகையின்றி பிரத்தியேகமாக இடம் கொடுத்து உதவி வந்திருப்பதுமன்றி கொஞ்சங்கூட சிரமம் பாராட்டாமல் சமயோஜிதமான யோஜனைகள் சொல்லிச் சேம்பருக்கு உதவி புரிந்து வந்திருக்கிறார்கள் என்றும் ஆதலால் இச்சேம்பர் அவர்கள்பால் நன்றிபாராட்டி வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறதென்றும் சொன்னார்.

இதன் பிறகு கமிட்டியாரால் தயார் செய்யப்பட்டிருக்கும் சென்றவருஷ ரிபோர்ட்டை அங்கீகரிக்கும்படியாகக் கேட்டுக்கொண்டார். இந்த ரிப்போர்ட் சங்கிரமாக அச்சிடப்பட்டு ஒவ்வொரு மெம்பருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறதென்றும், சேம்பர் செய்திருக்கும் வேலைகள் உபயோகமுள்ளவை என்றும் முக்கியமானவை என்றும் வர்த்தக வகுப்பார் அபிப்பிராயப்படுவார்கள் என்று தாம் நம்புவதாய்ச் சொன்னார்.

பிறகு வர்த்தக சம்பந்தமாய்ப்பேசி கடந்த 12 மாதகாலமாக காலசுபாவம் ஒரே சீராய் யிருந்ததென்றும் கைத்தொழில் சம்பந்தப்பட்ட பயிர்கள் சுமாரான வருமானத்தைக் கொடுத்திருக்கின்றனவென்றும் அதனால் வியாபார

மும் திருப்திகாமாக நடந்தேரி யிருக்கிறதென்று சொன்னார். கோரா, வெள்ளைகாடா, வர்ணச்சீட்டிகள்—முதலிய பீஸ் கூட்ஸ்கள் சென்ற வருடத்தைவிட விசேஷமாக நிகழ் வருடத்தில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன வென்றும், பிரஸ்தாப வருடத்தில் சென்ற வருடத்தைவிட, மணிலாக்கொட்டையும், ஆமணக்கும், தோலும் விசேஷமாக ஏற்றுமதி செய்யப்பட் டிருக்கின்றனவென்றும், கவர்ன்மெண்டார் தயாளச்சிந்தையுடன் துரைமுகத்தை விருத்தி செய்வதற்கு 50 லக்ஷம் கடன் கொடுத்து உதவி யிருப்பதால் ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டு, வரப்போகிற வருஷங்களில் வியாபாரம் மிகுந்த பலமாக நடக்குமென்று எதிர்பார்க்கக் கூடியதா யிருக்கிறதென்று சொன்னார். கைத்தொழில் விஷயமாகப் பேசி, வர்த்தகர்களுக்கு மிக அவசியமான இந்தியன் கம்பேனி மசோதா ஆக்ட் சட்டமாகச் செய்யப்பட்டு போய்விட்டதென்றும் ஆனால் அந்த ஆக்ட் பாசானபிறகு அச்சிட்டுப் பயிரங்கப்படுத்தப் படாதபடியால், இப்போது அது செய்யக்கூடிய நன்மை தீமைகளைப்பற்றி யாதொன்றும் சொல்ல முடியவில்லை என்று சொன்னார். படிப்பாளிகளும், மூலதன முடையவர்களும் வியாபார முயற்சியில் சேராமலிருப்பது ஒரு பெரிய குறையாயிக்கிறதென்று சொல்லி விசனித்தார். சென்னை ராஜதானியில் தகுந்த கைத்தொழில் பள்ளிக்கூடங்கள் இல்லை என்றும், செங்கல்வாராய நாய்க்கர் பள்ளிக்கூடத்தையும், சென்னை, வேலூர் ஆன்ஜ்மான்களைத் தவிற வேறே கைத்தொழிற் பள்ளிக்கூடங்கள் இல்லை என்றும், சென்னை மாகாணத்தில் கூட்டுறவும், தன் முயற்சியும் குன்றி யிருப்பதுடன் கைத்தொழிற்படிப்பு விஷயமாக கவர்ன்மெண்டார் கவன-மற்றவர்களாகவும் அலக்ஷியமாகவிருந்து-வருகிறார்கள் என்றும் எடுத்துப் பேசினார்.

கவர்ன்மெண்டில் கைத்தொழில் இலாக்கா ஒன்று 1909-ல் ஏற்படுத்தப்பட்டதென்றும், அதனால் பெருத்த நன்மைகள் உண்டாகப்போகிறதென்று எண்ணப்பட்டு வந்தபோது இந்தியா மந்திரியார் உத்திரவின்பேரில் 1911-ல் அந்த இலாக்கா எடுபட்டுப் போய்விட்டது. இது விஷயமாக இந்தியா மந்திரி புனராலோசனை செய்யவேண்டும் என்று சட்ட சபையில் ஆனரபில் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அவர்களுடைய பிறரேபணையின் பேரில் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. அப்போது கவர்னராகவிருந்த மேன்மைதங்கிய சர் ஆர்தர் லாலி, இந்தியா மந்திரியின் கவனத்தை இழுக்க லோக்கல் கவர்ன்மெண்டாரும் தயாராக விருப்பதாகவும் சொன்னார்; ஆயினும் அது முதல் இப்போது வருஷம் இரண்டு சென்றும் இதைப்பற்றி யாதொரு முடிவும் செய்யப் பட்டதாகத் தெரியவில்லை என்று சொன்னார். இதன் பிறகு கைத்தொழில் நிபுணர்களைப்பற்றிப் பேசினார். சென்னை மாகாணத்தில் தோல்படிப்பு கற்றுக்கொடுக்கவும், சாயம் போட கற்றுக்கொடுக்கவும், நெசுவுத்தொழில் கற்றுக்கொடுக்கவும் மூன்று நிபுணபோதகர்கள் நியமிக்கப்படவேண்டு மென்றும், தோல் தொழிலுக்கும், சாயத் தொழிலுக்கும் நிபுணர்கள் இங்கிலாண்டிலிருந்து நியமித்து அனுப்புவதாயும், நெசுவுத் தொழிலுக்கு இவ்விடத்திலேயே நியமித்துக்கொள்ளும்படியும் எழுதி அனுப்பினார்கள். அப்படியே நியமிக்கப்பட்டு அவரவர்கள் அந்தந்தத் தொழில் என்னவிதமாய் சென்னையில் நடத்தப்படுகின்றனவென்று ரிப்போர்ட் எழுதி அனுப்பினார்கள். அப்படி அனுப்பி 18 மாதங்களாகியும் இன்னும் அவைகளைப் பற்றி கவர்ன்மெண்டார் ஆலோஜனை செய்து கொண்டிருக்கிறார்கள். கைத்தொழில் விஷய

மாக வர்த்தமானங்கள் தெரிந்துகொள்ள ஒரு ஆபீஸ் ஏற்படுத்தப்போகிறதாகவும், திருகு ஆலை (Warping Mill) ஒன்று ஏற்படுத்தப்போகிறதாகவும், நெசவுகாரர்களுடைய புத்திரர்கள் படிக்கும்படியான வசதிகள் செய்து கொடுக்கப்படுமென்றும் நெசவுத்தொழிலை ஊர் ஊராகச்சென்று போதித்துக் கொடுக்கும் கூட்டத்தார் இங்கிலாண்டிலிருந்து தருவிக்கப்படுவார்கள் என்றும் கவர்ன்மெண்டார் வாக்கு கொடுத்திருந்தார்கள். அந்த வாக்குகள் எல்லாம் இனி நிறைவேற்றப்படவேண்டிய வாக்குகளாகவிருக்கின்றனவே ஒழிய நிறைவேற்றப்பட்ட வாக்காயில்லை. இவைகள் எத்தனைகாலம் கவர்ன்மெண்டாருடைய ஆலோசனையிலிருக்குமென்றும் எப்போதுதான் நிறைவேறுமென்றும் நாம் இலகுவில் சொல்லக்கூடியதாயில்லை என்றுசொல்லி, மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியார் இந்தியாவின் ஜனங்கள் கைத்தொழிலிலும், வியாபாரத்திலும், விவசாயத்திலும் முன்னுக்கு வந்துவிடுவார்கள் என்று தாம் நம்புவதாய் கல்கத்தாவிலும் இன்னொருவிடத்திலும் சொல்லியிருக்கிறார்கள் என்றும் நம்முடைய ராஜதானியில் நடக்கும் விஷயங்கள் மாக்ஷிமை தங்கிய சக்ரவர்த்தியவர்களுடைய எண்ணம் பலிதப்படுமென்று நினைப்பதற்கு அறிகுறியாயில்லை என்றும் சொல்லி முடித்தனர்.

இதன்பிறகு சென்றவருடத்திய வரவு சிலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டபின்பும், புதிய வருடத்திற்கு பிரசிடெண்ட், கமிட்டி மெம்பர்கள், காரியதரிசிகள் முதலாயின உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டபின்பும், மீட்டிங்கலைந்தது.

Karachi Chamber.

கராச்சி சேம்பர்.

கராச்சியிலிருந்து லங்காஷயருக்கு ஓடும் ஸ்டீமர்களின் சொந்தக்காரர்கள் ப்ரீஸ் கூட்ஸ் என்கிற ஜவுளியின்பேரில் கேட்கும் ஸ்டீமர் கேழ்வை விகிதங்களை இன்னும் குறைக்க முடியுமா என்று கராச்சி சேம்பர்காரர்கள் எழுதிக் கேட்டதற்கு சாத்தியபடாதென்றும் அதற்காக அவர்கள் விசனிப்பதாகவும் எழுதின பதில் வந்து சேர்ந்தது.

Ceylon Chamber.

சிலோன் சேம்பர்.

சென்ற பிப்ரவரி௴ 27௳ கூடிய வருஷாந்திரக்கூட்டத்தில், சேர்மன் மிஸ்டர் மாயர் சிலோனுக்கு பிரத்தியேகமாக ஒரு போர்ட் டிரஸ்ட் ஆபீசிருக்கவேண்டுமென்றும், இப்போ திருப்பதுபோல் கவர்ன்மெண்டுடன் சேர்ந்திருக்கக்கூடாதென்றும், அப்படி ஒருக்கால் ரேவுதுரை சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்க ஒருக்கால் போர்ட் டிரஸ்ட் ஆபீஸ் பிரத்தியேகமாக சமீபத்தில் ஏற்படுத்தாவிட்டாலும் அது சம்பந்தமான வேலைகளைப் பார்க்க அனுபோகமுள்ள ஒருவர் சேர்மெனாக நியமிக்கப்படவேண்டுமென்றும், அவருக்கு சர்க்கார் இலாக்கா சம்பந்தமானவேலை யாதொன்று மிருக்கக்கூடாதென்றும் பேசினார். சிலோன் கவர்னர் மேன்மை தங்கிய மாக்காலம் பிரத்தியேகமாக போர்ட் டிரஸ்ட் ஆபீசு ஒன்று ஏற்படவேண்டியதில்லை என்றும், அப்படி ஏற்பட்டால் கவர்ன்மெண்டாருடைய கௌரவம் குறைந்துபோகுமென்று சொல்லும் யோஜனையை கண்டனம் செய்து பேசி, ரேவுதுரை விஷயங்கள் இப்போது கவர்ன்மெண்டு மானேஜ்மெண்டிலிரு

ந்து வருவதிலிருக்கும் ஊழல்களை எடுத்துக் மிகவும் வற்புறுத்திப் பேசினது மன்றி இது காட்டி சென்னை, பம்பாய், கல்கத்தாவைப் விஷயத்தை நேரே இந்தியா மந்திரியாருக்கு போல சிலோனிலும் ஏற்படவேண்டு மென்று அறிவிக்கவேண்டுமென்று சொன்னார்.

INDUSTRIES AND INVENTIONS.

கைத்தொழில்களும் நூதனங்களும்.

The World's Production and Consumption of Bananas.

பனானா வாழைப்பழங்களின் உற்பத்தியும் செலவும்.

உலகத்தில் பனானா வாழைப்பழங்கள் எவ்வளவு உற்பத்தியாகின்றன வென்றும், எவ்வளவு செலவாகின்றன என்பதற்கும் ஜமேய்க்காவிலுள்ள (Jamaica) போர்ட் அன்டோனியோ (Port Antonio) விலிருக்கும் யுனைட்டட் ஸ்டேட்ஸ் அரசாங்கப் பிரதிநிதி ஒரு ரிபோர்ட் தயார் செய்து பயிரங்கப்படுத்தி யிருக்கிறார்.

இந்த ரிபோர்ட்டின் பிரகாரம், இந்த வாழைப்பழங்கள் உற்பத்தியாகும் தேசங்களுக்குள் ஜமேய்க்கா 1911-ம் வருஷத்தில் மிகவும் விசேஷமாக ஏற்றுமதி செய்திருக்கின்றது. ஷை வருஷத்தில் 16,497,385 குலைகள் அதாவது 1,456,581 பவுன் கிறைய மதிப்புள்ள தார்கள் ஏற்றுமதி செய்திருக்கின்றது. அதாவது அந்தத் தீவு மொத்த ஏற்றுமதித் தொகையில் பாதிக்குமேல் இவ்வாழை ஏற்றுமதி செய்யப்பட் டிருக்கிறது. எகுமதி செய்யப்பட்ட மொத்தத்தார்களுக்குள் 15,944,188 யுனைட்டெட் ஸ்டேட்ஸ்களுக்கும், 522,000 இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்துக்கும், பாக்கி கனடா, பெர்முடா, பிரிடிஷ்வெஸ்ட் இந்தீசுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வகை வாழைப்பழங்கள் அடியிற் கண்ட தேசங்களிலும் சாகுபடி செய்யப்பட்டு அடியிற் கண்டபடி 1911-ல் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன.

கோஸ்டா ரயிக்கா	...	9,310,600	குலைகள்.
ஹாண்டுரோஸ்	...	6,500,000	,,
கொலம்பியா	...	4,202,000	,,
பனாமா	...	4,261,000	,,
கனேரி தீவுகள்	...	2,648,000	,,
கியுபா	...	2,500,000	,,
நிகராகுவா	...	2,250,000	,,
காட்டிமாலா	...	1,756,000	,,
மெக்சிகோ	...	750,000	,,
பிரிடிஷ் ஹாண்டுரோஸ்	...	525,000	,,
சான்டோ டொமின்கோ.		400,000	,,
டச் கயானா	...	388,000	,,
இன்னும் சில தேசங்கள்.		250,000	,,

இப்படியாக ஏற்றுமதி கணக்கு காண்பிக்கப்பட்டபோதிலும், உற்பத்தியான சரக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்கைவிட அதிகமாயிருக்கவேண்டும். ஏனெனில் பசிபிக் சமுத்திரத்தில் சிதருண்டுகிடக்கும் தீவாந்திரங்களைப்போல அனேக தனிப்பட உள்ள தீவாந்திரங்களில் இந்தவகை வாழைகள் விசேஷமாய் உற்பத்தியாகிவருகின்றன. இவைகள் அச்சாக்குகளை விற்பனைக்காக அன்னியதேசங்களுக்கு அனுப்ப வசதி யற்றிருப்பதால் உள்நாடுகளிலேயே செலவழிந்துபோகின்றன. மேலும் ஜமேய்க்காவிலும், இவ்வாழைப்பழம் உற்பத்தியாகும் மற்றதேசங்களிலும், சுதேசிகள் பழங்களைச் சாப்பிடுவதுடன் வாழைக்காய்களை சமையல் செய்து சாப்பிடுவதுமன்றி பன்றிகளு

க்கு ஊட்டம் கொடுக்கும்படியான ஆகாரமாகவும் பிரயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். ஆகையால் மேலே எடுத்துக்காண்பிக்கப்பட்ட ஏற்றுமதி கணக்கைவிட மிக அதிகப்படியான தார்கள் உற்பத்தியாயிருக்கவேண்டு மென்று நாம் சொல்லாமலே விளங்கும்!

நிற்க, 1911-ம் வருஷத்தில் ஜமேய்க்காவில் 82,436 ஏகரா சாகுபடி செய்யப்பட்டதில் மேலே எடுத்துக்காண்பிக்கப்பட்டபடி 160 லக்ஷம் குலைகள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. இந்தப்பிரகாரம் கணக்கிட்டால் ஒரு ஏகராவுக்கு ஏற்றுமதி செய்யப்படக்கூடிய யோக்கியதை உடைய 200 குலைகள் உற்பத்தியாகின்றன. ஒரு குலை ஒன்றுக்கு ஒரு ஷிலிங்கு ஒரு பென்னி விகிதம் சராசரிக் கிரையமாகிறது. ஆதலால் ஜமேய்க்காவில் இவ்வகை வாழைச் சாகுபடியால் ஏகரா ஒன்றுக்கு 11 பவுன் 9 ஷிலிங் மொத்தவருமானம் (அதாவது செலவு கழிக்கப்படாமல்) வருகிறது. பனமாவிலும், கோஸ்டா ரயிக்காவிலும், பூமி மிகவும் செழிப்பா யிருப்பதாலும், கண்ணுகள் தனித்தனியேயும், நெருக்கமில்லாதபடியும் நட்டுவரப்படுகிறபடியால் ஒரு ஏகரா ஒன்றுக்கு 150-க்கு மேற்படாமலும் 140-க்கு குறைவுபடாமலுமுள்ள ஏற்றுமதி யோக்கியதையுடைய குலைகள் கிடைத்து வருகின்றன. கொலம்பியாவில் ஏறக்குறைய 200 குலைகள் கிடைக்கின்றன.

ஒரு குலையில் 9 சீப்புக ளிருந்தால் அது விலையாகக் கூடிய குலையாக எண்ணப்பட்டு வருகிறது. விலை எப்போதும் காலஸ்திதியைப் பொருத்ததாயிருக்கிறது. சில சமயம் ஏறியிருக்கும், சில சமயம் இறங்கியிருக்கும். 100 குலைகளுக்கு இன்ன விலை என்று 100 குலையை ஒரு மதிப்பு அல்லது அளவாக வைத்துக்கொண்டு விலை பேசப்பட்டும் விற்பனை செய்யப்பட்டும் வருகின்றன. 9 சீப்புகள் அல்லது அதற்கு மேலுமிருந்தால் ஒரு குலை என்று மதிக்கப்பட்டுவருகிறது. 8 சீப்புகள் உள்ள குலை முக்கால்குலை, 7 சீப்புகள் உள்ள குலை அரைக்குலை 6 சீப்புக்குலை கால் குலை ; 6 சீப்புகளுக்குக் குறைந்தகுலை பெரும்பாலும் ஏற்றுமதி செய்யப்படுகிறதில்லை. பனமாவிலுள்ள போக்காஸ்டெல்டோரோ ஜில்லாவிலும், அதற்கடுத்தபடி கோஸ்டா ரயிக்காவிலும், அதற்கடுத்தபடி கொலம்பியாவிலும் கனத்த குலைகள் உற்பத்தி யாகின்றன. 12 முதல் 15 சீப்புகள்கூட உள்ளகுலைகள் பனமாவிலும், கோஸ்டா ரயிக்காவிலும் உற்பத்தியாகின்றன. ஒரு சமயத்தில் பனமாவில் 22 சீப்புகள் உள்ள குலைகள் உற்பத்தியான.

1912-ல் ஜமேய்க்காவில் முந்திய வருஷத்தைப் பார்க்கிலும் அதிகப்படியான ஏகராக்கள் சாகுபடி செய்யப்பட்டிருந்தபோதிலும் அந்த வருஷத்தில் நீண்டகாலம் பஞ்சம்பாவி வந்தபடியாலும் நவம்பர்மீ 17உ 18உ களில் பெரிய புயல்காற்று அடித்தபடியாலும் 1912-ம் வருஷம் மாசூல் மிகவும் குறைந்துபோய்விட்டது. ஆயினும், கொலம்பியா, பனமா, காட்டிமாலா, முதலிய தேசங்களில் 1912-ல் விசேஷமான ஏகரா சாகுபடியா யிருக்கிறபடியால் உலக மொத்த உற்பத்தி குறைந்துபோகமாட்டாது. இன்னும் சொல்லப்போனல் சொற்ப அதிகப்படும்படியான உற்பத்தியே எதிர்பார்க்கப்படுகிறது.

வாழைப்பழம் உபயோகப்படுத்தப்பட்டு வருவதுமன்றி வாழைக்காயும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறதென்று ஏற்கனவே சொன்னோம். நிற்க, இந்தவகை வழைக்காயையும் பழத்தையும் கொண்டு பலவிதமான ஆகாரசாமான்களும் ஜமேய்க்காவில் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இந்தத்தொழில் அத்தேசத்தில் மிகவும் பலமாகவும், பிரபலமாகவும் நடைபெற்

றுவருகிறது. ஆயினும் சென்ற வருஷத்தில் முன் சொன்னபடி புயலடித்து பயிர் சேதாரப் பட்டு போய்விட்டபடியால் இத்தொழில் கொஞ்சகாலம் வரையில் மும்முரமாய் நடைபெற மாட்டாது.

ஜமேய்க்கா 1911-ல் மற்றதேசங்களைவிட இரண்டு மடங்கு அதிகமாக இவ்வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்திருக்கையில் யுனைட்டட் ஸ்டேட்ஸ் மற்றதேசங்களைவிட 5 மடங்கு அதிகமாக இறக்குமதி செய்திருக்கிறது. 1912-ம் வருஷம் ஜுன்மீ 30உயோடு முடிவாகும் வியாபார வருஷத்தில் 2,993000 பவுன் விலை மதிப்புள்ள 44,520,300 குலைகள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. 1911-ம் ஷ கிரேட் பிரிட்டன் 1,863,000 பவுன் விலை மதிப்புள்ள 6,714,000 குலைகள் இறக்குமதி செய்திருக்கிறது. அதே வருஷத்தில் ஜர்மனி பனை வாழைப்பழ ஆகாரசாமான்களுள்பட 411,000 பவுன் மதிப்புள்ள சரக்குகள் இறக்குமதி செய்திருக்கிறது; ஒருகுலை ஒன்றுக்கு 140 பழங்கள் இருப்பதாகக்கணக்கு செய்தால் யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஜனங்கள் வருஷம் 1-க்கு 6,000,000,000 பழங்கள் சாப்பிடுகிறார்கள். அதாவது ஒரு மனிதன் அல்லது ஒரு ஸ்திரீ 60 பழங்கள் மேனிக்கு சாப்பிட்டு வருகிறார்கள். இந்தப்பழங்களுக்கு கிராக்கி நாளுக்குநாள் உயர்ந்து வருகிறபடியால் தேவைக்குத் தகுந்தபடி உற்பத்தியும் விருத்தியாகுமா என்கிற பிரஸ்னைதானே உண்டாகிறது. மிக விசேஷமாக இந்தவாழை பயிர் செய்யப்பட்டு வரும் ஜமேய்க்காவிலே 100-க்கு 3 ஏக்ராக்கள் தான் வாழை சாகுபடிக்குள்ளாயிருக்கிறது. ஆகையால் இன்னும் அநேக ஏகராக்கள் அதே தேசத்தில் சாகுபடிக்குக் கொண்டுவரப்படாமலிருக்கிறது. மெக்சிகோ, சென்ட்ரல் அமெரிக்கா, பனமா, கொலம்பியா, ஏயிடி, டொமினிகன் குடியரசு ஆகிய இந்த தேசங்களில் ஏதேஷ்டமான செழிப்பான நிலங்கள் காலியாயிருக்கின்றன. இத்தேசங்களில் பூசாரமும், புஷ்கள மழையும் இன்னும் அநேக வசதிகளுமிருப்பதால் இந்த வாழைப்பயிர் அத்தேசங்களிலும் சாகுபடி செய்யப்படக்கூடுமாகையால் தேவைக்குத் தகுந்த சப்ளை ஒருக்காலும் குறையமாட்டாதென்று ஷை ரிபோர்ட்டில் காணப்பட்டிருக்கிறது.

The World's Cane Sugar Industry.

உலகத்தில் கரும்புச் சர்க்கரைத் தொழில்.

உலகத்தில் கரும்புச் சக்கரைத்தொழிலில் ஜப்பானியர்கள் சிறந்து விளங்குகின்றார்கள். இவர்கள் புத்தி சாதுரியமுடையவர்கள் என்றும், தொழிலில் சோர்வடையா முயற்சி யுடையவர்கள் என்றும் நாம் எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ? ஜப்பானியர்கள் பார்மோசா (Formosa) கரும்புச் சாகுபடியை எவ்வளவு தீவிரமாகவும் விநோதமாகவும் விருத்தி செய்து வந்திருக்கிறார்கள் என்று பாருங்கள்! முதலாவது பார்மோசாதீவே 1895-ல் சீனாவால் கொடுக்கப்பட்டு 1898-ல் தான் ஜப்பானுடைய கைக்குவந்தது. வந்தவுடன் அத்தேசத்தில் அதற்குமுன் சாதாரண முறைகள்படி செய்யப்பட்டுவந்த சொற்ப கரும்புச் சாகுபடியை நூதன முறைகள்படி பயிர் செய்து விர்த்திசெய்ய ஆரம்பித்தார்கள். அத்தீவார்கள் கருப்பஞ்சாற்றை அடுப்பில் வைத்து காய்ச்சி பாகாகவும் பனவெல்லமாகவும் செய்து வந்தார்கள். இவைகளிலிருந்து உண்டாகும் சர்க்கரை கறுப்பாகவும் காசுக்கற்றதாகவுமிருந்தது. ஜப்பான் கவர்ன்மெண்டார் செய்தமுதல் பிரயத்தனம் என்னவென்றால், கரும்புச் சாகுபடியையும் சர்க்கரைத் தொழிலையும் கற்று வரும்படி சிலரை ஜெர்மனி, ஜாவா, ஹாவாய் முதலியவிடங்களுக்கு அனுப்பினார்கள். இவர்கள் சுதேசம் வந்து சேர்ந்தவுடன் உள்நாட்டுப் பயிர்காரர்களைத் திருத்த ஆரம்பித்தார்கள். இவர்களைத் திருத்துவதிலிருந்த சிரமம் கொஞ்சநஞ்சமல்ல. ஆரம்பத்தில் திருத்தத்திற்கு உள்பட மனமியலாதவர்கள் இப்போது

நூதனமுறைப்படி சாகுபடி செய்தால் தகுந்த லாபம் கிடைக்கிறதென்று கண்டறிந்து சாகுபடி பழைய முறைகளுக்கு ஒரு கும்பிடுபோட்டு அனுப்பிவிட்டார்கள்! ஜப்பான் கவர்ன்மெண்டார் இவர்களைத் திருத்த வேண்டிய வசதிகளை செய்துகொடுத்ததுமன்றி எதேஷ்டமான செலவும் செய்தார்கள். சர்க்கரை காய்ச்சும் சாலை ஏற்படுத்துகிறவர்களுக்கு மூலதனம் கொடுத்து உதவியும் கடன் கொடுத்து வாங்கியும் செய்துவந்தார்கள்; யந்திரங்கள் வாங்குவதற்கும் கடன் கொடுத்துவந்தார்கள், கடுமையான நிபந்தனைகளில்லாமல் நிலம் கொடுத்தார்கள்; எரு இனமாக சப்ளை செய்துவந்தார்கள்; நானாவிதமான நூதனகரும்புகள் சாகுபடிசெய்து காண்பித்தார்கள். இப்படி பலவிதமாக கைதூக்கிவிட்டு உள்நாட்டு பயிர்க்காரர்கள் நூதனமுறைகளை அனுசரித்து சாகுபடி செய்யும்படியாக தூண்டிக்கொண்டிருந்தார்கள். இப்படி 1901 முதல் 1910 முழுதிலும் பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வந்தன. 1911-ல் தொழில் சரியானநிலைமைக்கு வந்துவிட்டது தெறிந்ததும் அத்தொழில் அதைக் காப்பாற்றிக்கொள்ளும்படியான பரிபக்குவ மடைந்த பின்பு கவர்ன்மெண்டார், கொடுக்கப்பட்ட சில சுதந்தரங்களையும் எடுத்துப்போட்டார்கள். சாகுபடிக்காரர்கள் புதிய பயிர்கள் நடுவது முதலிய தங்களுடைய கடமைகளைச் செய்ய கவர்ன்மெண்டார் கடுமையான சட்டங்கள் பிறப்பித்துக் கட்டாயப்படுத்தினார்கள். கவர்ன்மெண்டார் இத்தொழிலை விருத்தி செய்ய ஆரம்பித்த 1902-ல் ஆயிரம் ஆலைகள்தானிருந்தன. இவைகளும் எருமைமாடுகளால்தான் ஆட்டப்பட்டு வந்தன. ஆனல் 1911-லோ, அதாவது 9 வருஷகாலத்திற்குள் 29 பெரிய சாலைகள் ஏற்பட்டு திமதமான வேலைகள் செய்து வந்தன. இப்பேர்கொற்ற ஒரு அற்புதம் சாகுபடிவிஷயத்தில் எத்தேசத்திலும் கண்டதில்லை. பழைய பார்மோசா தீவு அதுதானே அல்லவோ என்று சந்தேகிக்கும்படியாக மாறிபோய்விட்டது. கரும்பு இப்போதைவிட இன்னும் விசேஷமாக விளைந்தால், ஏற்பட்டிருக்கும் சாலைகள் போதுமோ போதாதோ என்று சந்தேகிக்கப்படுகின்றது.

பழைய முறைப்படி சாகுபடி செய்ததில் ஏக்கருக்கு 6 டன் விளைவு; 100 டன் கரும்புக்கு 6 டன் சர்க்கரை தேறினது. புதிய சாகுபடிபடி ஏக்ராவுக்கு 14 டன் விளைவு; 100-க்கு 11 டன் சர்க்கரை தேறுகிறது; முந்தி தயாரான சர்க்கரை கரும்பு பிரஸ்தாப முறைப்படி தயாராகும் சர்க்கரை நேர்த்தியாகச் சீர்திருத்தப்பட்டது. ஆகவே 9 வருஷ காலங்களுக்குள் ஏக்ராவிற்கு 5 மடங்கு அதிகமான கரும்பு கிடைப்பது மன்றி சாகுபடிக்காரர்களும், ஆலைக்காரர்களும், வரி வசூல் மூலியமாக கவர்ன்மெண்டாரும் எதேஷ்டமான லாபத்தை அடைந்து வருகின்றார்கள். 1902-1903-ல் பார்மோசாவில் தயார் செய்யப்பட்ட சர்க்கரை 33 ஆயிரம் டன் (மட்டம்) 1910-11ல் 256,950 டன்கள். அவைகளில் மட்டச் சரக்கு 59 ஆயிரம் டன்போக பாக்கி நேர்த்தியான உயர்ந்த சர்க்கரை. நம்முடைய தேசம் கைத்தொழிலிலும் வியாபாரத்திலும் எவ்வளவு விர்த்தி அடைந்திருந்தபோதிலும், இப்பேர்பட்ட அற்புதமான பெற்றியை அடைந்ததில்லை அடையுமென்று எதிர்பார்க்கப்படவுமில்லை.

An Automatic Time-Stamp.

மணி காண்பிக்கும் முத்திரை.

வருஷம், மாதம், தேதி, வாரம்—ஆகிய இவைகள் அமைந்த முத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டு வழங்கி வருகின்றன. அவைகளுடன்கூட மணி காண்பிக்கக்கூடிய முத்திரைகளை இது காறும் நாம் கேள்விபட்டதில்லை. இப்போது இம்மாதிரி முத்திரைகளும் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. பெரிய வர்த்தகக்கம்பெனிக்காரர்கள் இம்மாதிரியான முத்திரைகளை வெகுவாய் விரும்பி வாங்கிவருகின்றார்கள். ஒரு ஊரிலிருந்து ஒரு கடிதம் ஒரு வர்த்தககம்பெனிக்கு வந்தால், வந்தவுடன் கம்பெனியார் அந்த முத்திரையை அதன் பேரில் அழுத்துகிறார்கள். அப்போது லெட்டர் வந்து சேர்ந்த மணி இன்னதென்று தெறிகிறது. இதற்குபதில் செய்யப்பட்டு தபாலில் போடும்போதும் அதன்பேரில் அம்முத்திரை குத்தப்படுகிறது. ஆதலால் லெட்டர் வந்தமணியும் பதில் அனுப்பப்பட்டமணியும் நன்றாய் இந்த புதிய முத்திரையால் தெரிகிறது. இந்த முத்திரைகள் சாதாரணமுத்திரை ஸ்டாம்புகள்போலிருப்பதுடன் ஒரு சூக்ஷ்மமான சிறியகெடியாரம் ஒன்று அமைக்கப்பட்டு அதன் கைகளில் விசை வைக்கப்பட்டிருக்கிறது

TRADE NEWS AND NOTES.

வியாபார வர்த்தமானங்களும் குறிப்புகளும்.

Improvement in Telegraphing.

தந்தி அடிப்பதில் விர்த்தி.

அமேரிக்காதேசத்தில் ஒரு தந்தி கம்பேனியார், மனிதர்களைக்காட்டிலும் மிக வேகமாக தந்தி அடிக்கக்கூடிய யந்திரங்களைக் கண்டுபிடித்து அதற்குத் தகுந்த தந்திமார்க்கங்களைப் போட்டு வருகிறார்கள். இந்தக் கம்பேனி தந்தி ஆபீசுகளில் போஸ்ட்கார்டுகள்போல (Telecard) டெலிக்கார்டுகள் என்றுசொல்லும்படியானகார்டுகள் விற்றுவரப்படுகின்றனவாம். இவைகளில் எழுதப்படவேண்டிய விஷயங்களை டைப்பில் அடித்து இவர்களுடைய தந்தி ஆபீசின் மேல்விலாசத்திற்கு அனுப்பிவிட்டால், அந்த தந்தி ஆபீசுக்காரர்கள் அக்கார்டில் எழுதப்பட்டுள்ள விஷயங்களை விரும்பப்பட்ட ஊருக்குத் தந்தி . அடித்துவிடுகிறார்கள். அந்த ஊரில் உள்ளதந்தி ஆபீசுக்காரர்கள் அந்த தந்தி சமாச்சாரங்களைப் பெற்று முன்போல டயிப் செய்து மேல்விலாசத்தையும் எழுதி தபாலில் போட்டுவிடுகிறார்களாம். இதனால் தபால் மூலியமாக ஒருநாள் செல்லக்கூடிய ஒரு தபால் கார்ட்டு, டெலிகார்டு மூலியமாக இரண்டு அல்லது மூன்றுமணி நேரத்தில்போய்ச் சேர்ந்துவிடுமாம். இதன்றி இங்கிலீஷ் அரிச்சுவடியிலுள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் சில சின்னங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சின்னங்க ளடங்கிய டயிப்ரயிட்டர் மிஷினைப் போல ஒருமிஷின் (Machine) கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. வர்த்தமானப் பத்திரிகைகளிலுள்ள நீண்டசமாசாரங்களை தந்தி அடிப்பதற்கு இந்த சின்னங்களைத்தெறிந்துகொண்டு அந்த சின்னங்கள் பிரகாரம் டயிப் அடித்து அந்த மிஷனிடம் கொடுத்துவிட்டால், அதேபிரகாரம் தந்தி அடித்துப்போடுகிறது. அந்த தந்தியைப்பெற்று பழையபடி சாதாரணபாஷையில் எழுதி பத்திரிகையில் பிரசுரிக்கலாம். சார்ஜ் சாதாரண தந்தியைவிட குறைவா யிருக்கிறதாம். இந்த புதிய கம்பேனியார் அமெரிக்காதேசத்திலுள்ள யுனைட்டெட்ஸ்டேடில் சில ஊர்களில் தங்களுடைய தந்தி ஆபீசுகளையும் மார்க்கங்களையும் ஸ்தாபித்துக்கொண்டு வருகிறார்களாம். இந்த தந்தி மெஷின் (Teletape) டெலிடேப் என்று சொல்லப்பட்டுவருகிறது. இதில் இருக்கும் இன்னு மொரு ஆச்சரியம் என்னவென்றால் இந்த டெலிடேப் என்கிற யந்திரம் தந்தி அடித்துக்கொண்டிருக்கும்போதே, இந்த மெஷினுக்காக ஏற்பட்ட தந்திக்கம்பி மூலியமாக டெலிபோனும் பேசலாமாம், பைசக்கில் மோட்டார்வண்டி, கிராமபோன் முதலிய நூதனங்களைப்போல இந்த புதிய தந்தியும் நம்தேசத்தை கூடியசீக்கிரம் எட்டிப் பார்க்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்தில் தபால் இலாக்காவிலும் தந்தி இலாக்காவிலும் சமாசாரங்கள் இப்போதைவிட இன்னும் மிகத் துரிதமாக எட்டுவதற்கு பல பிரயத்தனங்கள் நிமிஷத்திற்கு நிமிஷம் செய்யப்பட்டு வருகின்றன. பிரபலமான வர்த்தகர்களுக்கு தந்திகள் வந்தால் அவைகளை தந்தி ஆபீசுக்காரர்கள் அந்த நிமிஷமே மத்திய டெலிபோன் ஆபீசுக்கு டெலிபோனில் சொல்லிவிடுகிறார்கள். இந்த டெலிபோன் ஆபீசுக்காரர்கள் அச்சமாசாரங்களை டெலிபோனில் சொல்லிப் போடுகிறார்கள்.

The Bank of Mysore.

மைசூர் பாங்கி.

மைசூர் சமஸ்தான வுதவியின்பேரில் ஒரு பாங்கி ஒன்று ஏற்படப்போகிறது. இதன் நோக்கம் என்னவென்றால் சமஸ்தானத்தின் கைத்தொழிற்களையும் வியாபாரத்தையும் விருத்தி செய்யவேணுமென்பதே. இதற்கு மைசூர் பாங்கி என்று பெயர். இதற்கு பிரதானஸ்தலம் பெங்களூர். இதற்கு 7 இந்தியப் பிரபுக்கள் தற்காலம் டைரக்ட்டர்களாகவும், அவர்களுக்கு திவான்பகதூர் பட்டண்ணசெட்டி சேர்மேனாகவிருந்து பங்குதார்கள் சேர்ப்பார்கள். இந்த பாங்கிக்கு கவர்ன்மெண்டார் பண உதவி செய்கிற ஒரு சம்பந்தத்தை தவிர சமஸ்தானத்தாருக்கு இதில் யாதொரு பற்றுமில்லை. லாப நஷ்ட முழுதிலும் பங்குதார்களைச் சேர்ந்தது. இதற்கு மூலதனம் 20 லக்ஷம். ஆனால் பங்குதார்கள் செலுத்தினதொகை 5 லக்ஷமானவுடன் பாங்கிவேலைகள் நடத்த ஆரம்பிக்கப்படும். 10 வருஷம் வரையில் $2\frac{1}{2}$ லக்ஷம் தாழ்ந்த் கையிருப்பு இருக்கும்படி சமஸ்தானத்தார் உதவி புரிவார்கள். இந்தத் தொகைக்கு வட்டி கிடையாது. பாங்கிக்குத் தேவையானால் இன்னொரு $2\frac{1}{2}$ லக்ஷம் பாங்கியில் டிபாசிட்டாக யிருக்கும்படி கொடுப்பார்கள்.

பாங்கியை நடத்தி வருவதில் என்ன வருஷச் செலவாகிறதோ அதில் சரி பாதி சமஸ்தானத்தாரால் ஒப்புக்கொள்ளப்படும். இது விஷயத்தில் ரூ. 10000, சமஸ்தானத்தாருக்குச் செலவாகு மென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பாங்கி கெஜானாபோலவே சில விடங்களில் வேலை நடத்துமாம். பணத்தை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டுபோகும்போது போலீஸ் பந்தோபஸ்து, பாரா முதலியவைகள் சமஸ்தானத்தாரால் இனாமாக சப்ளை செய்யப்படுமாம். பாங்கிக்குச் சகாயம் செய்வதற்கு சமஸ்தானத்தார் சில நிபந்தனைகளும் விதித்திருக்கிறார்கள். (1) ஸ்தாபர சொத்துக்களை அடமானம் வைத்துக்கொண்டு கடன் கொடுக்கக்கூடாது. சீமை உண்டிகள் மாற்றப்படக்கூடாது. பாங்கியின் மூலதனத்தில் சரி பாதி மைசூர் சமஸ்தானத்திலேயே முடக்கி புரட்டவேண்டும். இந்த பாங்கியால், விவசாயமும், காபி முதலிய பயிர் தொழில்களும் மிகவும் விசேஷமாக விருத்தி அடையுமென்றும் படிப்படைந்த மைசூர் வாசிகளுக்கு மைசூர் சமஸ்தானத்திலேயே தகுந்ததொழில் அகப்படு மென்றும், பொதுவாய் வியாபாரமும் கைத்தொழிலும் சிறந்தபடி விருத்திசெய்யப்பட்டு வரும் என்று எதிர் பார்க்கப்பட்டு வருகின்றது.

Public Holidays in India.

இந்தியாவில் பொதுஜன ஓய்வு நாட்கள்.

இந்தியாவில் மதசம்பந்தமான ஓய்வு நாட்களை நிர்ணயித்துப் பயிரங்கப்படுத்துவதற்கு அந்தந்த லோக்கல் கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் இந்த நாட்கள் இன்ன இன்ன நாட்கள் என்று நிர்ணயிக்கப்பட்டு 1881-ம் வருஷத்திய நெகோஷிய பில் இன்ஸ்ட்ரூமெண்டு ஆக்ட்டில் சொல்லப்பட்டிருக்கும் பொதுஜன ஓய்வுநாட்களுடன் சேர்க்கப்பட்டால் மிகவும் வலுவாயிருக்குமென்று ஆனரபில் மிஸ்டர் கஜனவி வைசிராயின் சட்டசபையில் பிரரேபித்தனர். இதற்கு ஆனரபில் சர் ரேயினால்ட் கிரடேக் பதில் சொன்னார். அது யாதெனில் இந்தக்கேள்வியைக் கேட்கும் ஆனரபில் மெம்பர் அபிப்பிராயப்படி கவர்ன்மெண்டார் செய்ய இயலாதபோனபோதிலும் ஷெ மெம்பருடைய கருத்துடன் கவர்ன்

மெண்டார் அனுதாபம் பாராட்டுகிறார்கள் என்று சொன்னார்.

Indian Finance and Currency.

இந்திய பணமும், நாணயமும்.

இது விஷயமாக விசாரணை செய்ய ஒரு கமிஷன் ஏற்படப்போகிறதாக இந்தியா மந்திரியார் அவுஸ் ஆப் காமன்சில் பிப்ரவரி மீ 13உ சொன்னாரல்லவா. அது விஷயமாக இந்தியா மந்திரியாருக்கும் இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் போக்குவரத்தான கடிதங்கள் பயிரங்கப்படுத்தப்படுமோ என்று ஆனரபில் மிஸ்டர் G. M. சிட்னாவிஸ் மார்ச்சு மீ கூடிய சட்டசபையில் ஒரு கேள்வி கேட்டார். இந்தப் பிரஸ்னைக்கு என்ன பதில் சொல்லப்பட்டதென்றால், இது விஷயமாக இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் இந்தியா மந்திரியாருக்கும் யாதொரு கடிதம் போக்குவரத்துகள் நடக்கவில்லை என்றும், ராயல் கமிஷன் நியமிப்பதற்கு மகாராஜாவிற்கு ஒரு எண்ண மிருக்கிறதென்று லண்டனிலிருந்து ஒரு தந்திவந்ததைத் தவிற மற்றப்படி வேறொரு தகவலுமில்லை என்றும், இது விஷயமாக சக்ரவர்த்தியாருக்கு யோஜனை சொல்லக்கூடிய அதிகாரம் முதல் மந்திரியாருக்கிருக்கிறதே யொழிய மற்றபடி வேறெவருக்குமில்லை என்றும், ஆயினும் இன்று இந்த சபையில் நடந்தேறினதர்க்கம் முதல் மந்திரியாருக்கு எட்டி ராயல் கமிஷனில் இந்தியப் பிரதி நிதிகளும் தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்று இந்தியர்கள் விரும்புகிறார்கள் என்று அவர் அறிந்து கொள்ளுவார் என்றும் பதில் சொன்னார். ஆகையால் அந்த பிரேரபனை வாப்பிஸ் பெற்றுக்கொள்ளப்பட்டது.

Coal Trade.

நிலக்கரி வியர்பாரம்.

கல்கத்தாவிலிருக்கும் "Indian Mining Association" என்று சொல்லும்படியான இந்தியன் சுரங்க சபையின் வருஷாந்திரக்கூட்டம் சென்ற மார்ச்சு மீ 7உ நடந்தேறினது. சேர்மனாயிருந்த மிஸ்டர் A. தோப்பிங் வியாபாரச் சரக்குகள் போக்குவரத்து வசதிகளைப்பற்றி பேசி இருப்புப்பாதை கம்பெனிகளிடம் காணப்படும் குறைகளெல்லாம் அவர்களுடையதல்லவென்றும், கவர்ன்மெண்டார் அந்த கம்பெனிகளுக்குப் போதுமானபடி பணம் கொடுக்காதபடியால் அந்த குறைக ளிருக்கின்றனவென்றும், ஈஸ்ட் இந்தியன் ரெயில்வே கம்பெனியார் வருகிற மூன்று வருஷங்களுக்குள் $7\frac{1}{2}$ கோடி பொருமானமுள்ள விருத்திகள் செய்வதாக ஏற்பாடு செய்திருந்தும் கவர்ன்மெண்டார் அக்கம்பெனிக்கு வருஷவாரி கொடுத்துவரும் மூலதனத்தைப் பார்க்கிலும் 50 லக்ஷம் ரூபாய் தான் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள் என்றும், போக்குவரத்துகளை வியாபார விருத்திக்குத் தகுந்தபடி விருத்தி செய்துகொண்டுபோகும் ஒரு ஏற்பாட்டில் கவர்ன்மெண்டார் இப்படி இழுத்துப் பிடித்துக்கொண்டிருந்தால் வியாபாரம் எப்படி விருத்தியாகுமென்றும், இப்படி யிருந்தால் வியாபாரம் நஷ்டமடையுமென்று சொன்னார்.

ரயில்வே கம்பெனியார் அன்னியதேச நிலக்கரியை விசேஷமாய் வாங்கிவந்தால் உள்நாட்டு நிலக்கரி வியாபாரத்திற்கு ஊனமுண்டாகுமென்றும், அன்னியதேசக் கரியை வாங்கக்கூடாதென்று தாம் சொல்லவில்லை என்றும், வாங்கினபோதிலும் சொற்பமாக வாங்கவேண்டுமென்றும், அன்னியதேசக் கரி இந்தியாவிற்குள் வந்து நுழைவதற்கு காரணம், உள்நாட்டுக் கரிக்கு போக்குவரத்து வசதிகள் போதுமானபடி

செய்யப்படாததே காரணம் என்றும் அதற்கு நிலக் கரி வியாபாரத்தை உத்திரவாதமாக்கக் கூடாதென்றும் சொன்னார்.

Indian Sugar-cane.

கரும்பு.

அன்னியதேச சர்க்கரை இறக்குமதியின் பேரில் ஏற்கனவே போடப்பட்டிருக்கும் தீர்வை போதாதென்றும், 100-க்கு 5 விகிதம் இன்னும் தீர்வை போடவேண்டுமென்று சென்ற மார்ச்சுமீ கூடிய வைசிராய் சட்டசபையில் ஆனரபில் மிஸ்டர் ஸ்ரீராம் பிறரேபித்து அப்படி தீர்வை போடாமலிருப்பதால் இறக்குமதி மிஞ்சி உள்நாட்டு சர்க்கரை வியாபாரத்தைக் கெடுத்துப் போடுகிறதென்றும் அதன் காரணமாக கரும்பு சாகுபடி 1908 ம் வருஷத்தைவிட 1911-12-ல் குறைந்துபோய்விட்டதென்றும் கணக்கு எடுத்துக் காண்பித்தார். கவர்ன்மெண்டார் தரப்பிற்கு ஆனரபில் மிஸ்டர் ஜில்மன் கணக்கு காண்பித்ததில் கரும்பு சாகுபடி முந்தியவருஷங்களைப் பார்க்கிலும் 1911-12-ல் மிகவும் விசேஷமாக சாகுபடி செய்யப்பட்டு வந்திருக்கிறதென்று தெரிய வந்தது.

Carting and Transporting Co.

பாரவண்டி கம்பெனி.

நிலக்கரி, பஞ்சு, இரும்பு ஆகிய இந்தபாரமான மூட்டைகளை ரேவுதுரைக்குக் கொண்டு போகவும அல்லது வர்த்தக ஸ்தலங்களுக்கு கொண்டுபோகவும் வண்டிகள் சப்ளை செய்ய பம்பாயில் ஒரு கம்பெனி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதலால் மாட்டு பாரவண்டிகளுக்கு பம்பாயார் தாம்பூலம் கொடுத்துவிட்டார்கள் போலும்! இந்த புதிய கம்பெனியார் 3 டன் முதல் 10 டன் வரையில் பாரம் சுமக்கக் கூடிய 25 மோட்டார் வண்டிகள் வாங்கியிருக்கிறார்கள். இந்த 25 வண்டிகளுக்கும் வேலை அகப்பட்டால் தினம் ஒன்றுக்கு ஆயிரம் டன் பாரம் போக்குவரத்து செய்யலாம். இராணுவ இலாக்கா சாமான்களை போக்குவரத்து செய்ய இந்தக் கம்பெனியார் அதற்கு தகுந்த வண்டிகள் தயார் செய்துவரப் போகிறார்களாம். இந்த கம்பெனி எல்லா வர்த்தகர்களாலும் ஆதரிக்கப்பட்டு வருகின்றதாம்.

National Bank of India, Ltd.

நேஷனல் பாங்கி லிமிட்டெட்.

டிசம்பர்மீ 31உயுடன் முடிவாகும் 1912-ம் வருஷத்திற்கு, கெட்ட கடன், சந்தேகமான கடன் இன்னுமுள்ள செலவுகளுக் கெல்லாம் தள்ளி அசல் லாபம். 270,639 பவுன் 6 ஷிலிங் 2 பென்ஸ் வந்திருக்கிறது. சென்ற வருஷ கையிருப்பு பவுன் 53,368—17—7 பென்ஸ் ஆக 1913-ம் ஷ ஆரம்பத்தில் மொத்தக் கையிருப்பு 324,008 பவுன் 3 ஷிலிங் 9 பென்ஸ். பங்குதாரர்களுக்கு ஏற்கனவே கொடுக்கும்படி சிபார்சு செய்யப்பட்ட 100-க்கு 12 உடன் இப்போது 100-க்கு 21 இனும் லாபம் கொடுக்கும்படி டைரக்ட்டர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

Mysore Gold Mining Company.

மைசூர் பொன் சுரங்க கம்பெனி.

1912-ம் வருஷத்தில் 904,080 பவுன் பொருமானமுள்ள பொன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. செலவுபோக 852,802 பவுன் மதிப்புள்ள பொன்தேறி யிருக்கிறது. பங்கு ஒன்று 4 ஷிலிங் 6 பென்ஸ் மேனிக்கு லாபமும் பங்கு ஒன்றுக்கு இனும் ஒரு ஷிலிங்கும் டைரக்டர்கள் கூறியிருக்கிறார்கள்.

Mr. Ramsay Macdonald in Bombay.

பம்பாயில் மிஸ்டர் ருாம்ஸே மாக்டானல்ட்.

நிகழ் ஏப்பிரல் மாதத்தில் பார்லிமெண்டு மெம்பராகிய மிஸ்டர்ருாம்ஸே மாக்டானல்ட் பம்பாயிலிருக்கும் மிஷன் பள்ளிக்கூட மாணுக்கர்களுக்கு செய்த பிரசங்கத்தில் பீ.ஏ., எம்.ஏ. பரீக்ஷைகளில் தேறி பிரசித்தி பெறுவது சிலாக்கியந்தான் ஆயினும் அவர்கள் சுயகாரியப்புலிகளாக விருப்பது விரும்பப்படக் கூடியதல்லவென்று சொன்னுர். தங்களுக்கும் மற்ற சகோதர ஜனங்களுக்கும் ஆக இருவகையாருக்கும் உபயோகமாக விருக்கும் பாதையில் செல்லவேண்டுமென்று வற்புறுத்திப் பேசினுர்.

Madras Electric Tramways.

சென்னை டிராம் வண்டிகள்.

டிபன்ச்செர் கடனுடைய வட்டிக்கும், செலவிற்கும், தள்ளி தேய்வு அழிவிற்கும் புதுப்பிப்பதற்காகவும் பிரத்தியேகமாக வைக்கப்பட்டிருக்கும்நிதிக்கும் 5 ஆயிரம் பவுன் மாற்றினபிறகு 1912-ல் இந்த டிராம் கம்பெனிக்கு 10,523 பவுன் அசல்லாபம் தேறியிருக்கிறது. 1912-க்கு பங்குதார்களுக்கு 100-க்கு 4 மேனி கொடுத்துவரும்படி டைரக்டர்கள் சிபார்சு செய்திருக்கிறுர்கள்.

Yarn Trade.

நூல் வியாபாரம்.

கல்கத்தாவிலிருக்கும் ஆலை சுவானதார் சங்கத்தாரின் வருஷாந்திரக்கூட்டம் நிகழ் மாதம் 9உ நடந்தேறினது. சேர்மனுக விருந்த சர் ஷாபெட்டிட் சென்றவருஷ ரிபோர்டைப் பற்றிபேசி நூல் அந்த வருஷத்தில் அதன் முந்தியவருஷத்தைவிட அதிகமாக தயார் செய்யப்பட்டிருக்கிறதென்றும், இப்படி தயார் செய்யப்பட்டிருக்கும் நூலில் பெரும்பாகம் உள்நாட்டு ஆலைச் சொந்தக்காரர்களாலேயே வேஷ்டிகள் நெய்வதற்காக வாங்கிக்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும், பாக்கிநூல்தான் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறதென்றும், அப்படி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் நூலின் கணக்கை சென்ற வருஷ ஏற்றுமதிக் கணக்குடன் சீர்தூக்கிப் பார்த்தால் பிரஸ்தாபவருஷம் அதிகப்படியாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறதென்றும், மேலே எடுத்துக் காண்பிக்கப்பட்ட கணக்கு இந்தியா முழுமைக்கு மென்றும், இனி நூலுக்காக, இந்தியா, சினு முதலிய தேசங்களை நம்பிக் கொண்டிருக்கவேண்டியதில்லை என்றும், ஆயினும் அந்நாட்டுச்சரக்குகள் இந்தியா மார்க்கட்டிற்குள் நுழையவிடாதபடி நூல் உற்பத்தியை இன்னும் விசேஷப்படுத்திக்கொண்டு வரவேண்டுமென்றும் சொன்னுர்.

Fire on Board a Steamer.

ஸ்டீமரில் தீப்பிடித்தது.

சென்னைத் துறைமுகத்தில் லண்டனுக்கு சரக்கு ஏற்றிக்கொண்டிருந்த "கல்ஞ" ஸ்டீமரில் நிகழ்மீ 8உ செவ்வாய்க்கிழமை தீப்பிடித்து சணல், தோல், மணிலாக்கொட்டை, பட்டு முதலிய சரக்குகள் சேதப்பட்டுப்போய்விட்டன. வெகுநாழிகை வரையில் நெருப்பு அணைக்கப்படவில்லை. சேதப்பட்டசாமான்கள் கரைக்குக் கொண்டுவரப்பட்டு ஏலம் போடப்பட்டுவருகின்றன. நஷ்ட மதிப்பு இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை.

Debate on the Budget.

சட்ட சபையில் வரவு செலவு திட்டக்கணக்கு நிர்ணயிக்கப்பட்டபோது நடந்த தர்க்கம்.

1913ளு ஏப்ரல்மீ 4வ,

சமுத்திரப் போலீஸ்.

ஆனரபில் மிஸ்டர் A. K. G. மாக்காயர்:— "ஏற்றுமதியும் இறக்குமதியும் விசேஷமாகநடக்கும் துறைமுகங்களில் சரக்குகள் திருட்டுப்போகின்றன. அப்படிப்பட்ட அனேக கேசுகள் ரிபோர்ட் செய்யப்படாமலிருப்பதுமன்றி கண்டுபிடிக்கப் படாமலிருக்கின்றன. பிரன்ச்சு இலாக்காவிற்குச் சேர்ந்த துறைமுகங்களின் ஏற்றுமதி இறக்குமதி கணக்குகளை பிரிடிஷ் துறைமுகங்கள் கணக்குடன் ஒத்திட்டுப்பார்த்தால் பிரிடிஷ் துறைமுகங்களில் ஏற்றுமதி இறக்குமதி நாளுக்குநாள் குறைவுபட்டு வருகிறதென்று விபரமாய்த்தெரியும். கூடலூர், பரங்கிப்பேட்டை, நாகப்பட்டணம் ஆகிய இந்த துறைமுகங்களில் மணிலாக்கொட்டை ஏற்றுமதி செய்கிறவர்கள் சரக்குகள் திருட்டுப்போய்விடுகின்றனவென்றும், சரக்குகள் அனுப்பிய அளவுப்படி போய்ச்சேருகிறதில்லை என்றும் கூப்பாடு போடுகிறார்கள். இதற்குக்காரணம் என்னவென்றால், கரைக்கும் ஸ்டீமருக்கும் மத்தியில திருட்டுப்போவதே ஒழிய மற்றப்படி வேறில்லை. கடற்கரை போலிசார் நியமிக்கப்பட்டால், இக்குறை தானேவிலகும். ஆகையால் ஏற்றுமதி இறக்குமதி விசேஷமாகச் செய்யப்படும் துறைமுகங்களில்கடற்கரைபோலீஸ் (Marine Police) ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று மிகவணக்கமாய்த் தெறிவித்துக்கொள்ளுகிறேன்" என்று பேசினார்.

பண்ணை ஆட்கள்.

ஆனரபில் மிஸ்டர் E. F. பார்பர்:—"விவசாயக் கூலிக்காரர்கள் சம்பந்தமான பிரஸ்னை இத்தேசத்திற்கு மிக முக்கியமானது. அப்படிச்சொல்லுவதற்கு நான் கணக்கெடுத்துக் காண்பிக்கவேண்டுமென்பதவசியமில்லை. உங்கள் முன்னில் வரவு செலவு திட்டக்கணக்கு வைக்கப்பட்டிருக்கிறது. விபரமாய்ச் சொல்லப்போனால் நீங்கள் பட்வாடா செய்துக்கொண்டிருந்த முழுப்பணமும் விவசாய மூலமாய் உண்டானது. விவசாயமில்லாவிட்டால் நாகரீகவாழ்வும் கிடையாது; படிப்பும் கிடையாது; தேசத்தில் விவசாயமில்லாவிட்டால், இவ்விராஜதானியின் அதிமேன்மையான புத்திக்கூற்மையுடைய பிரதிநிதிகளாகிய தாங்கள் இன்று கூடியிருக்க நேரிட்டிருக்கமாட்டாது. மேன்மைதங்கிய வைசிராயாகிய தாங்கள் வீற்றிருக்கும் நாற்காலிகளும் கவர்ன்மெண்டு தரப்பு மெம்பர்கள் வீற்றிருக்கும் ஆசனங்களும் காலியாகவே தானிருக்கும்! ஆகையால் கூலிக்காரர்கள் சம்பந்தமான பிரஸ்னையைப்பற்றி ஆழ்ந்தபடி யோசனைசெய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்; கூலிக்காரர்களைத் தீபாந்திரத்திற்கு அனுப்பிப்பதால் கனத்ததொந்திரவுண்டாகின்றது. கூலிக்காரர்களைத்தீபாந்திரத்திற்கு அனுப்பிக்கும்விதம் ஒழுங்காய் நடைபெற்றுவருகிறதென்று மேன்மைதங்கிய தங்களுடைய கவர்ன்மெண்டு திருப்தி அடைந்திருப்பதுபோல காணப்படுகின்றது; கவர்ன்மெண்டு திருப்தி அடையவேண்டியது அவசியமா? கவர்ன்மெண்டு திருப்தி அடையவே கூடாதென்று நான் ருஜூப்படுத்த தயாராயிருக்கிறேன். கவர்ன்மெண்டாருடைய ஆபீசுகளிலிருந்தே இந்த ருஜூக்களைச் சேகரித்துக்கொள்ளலாம். தீபாந்திரத்திற்கு கூலிகளைக் கொண்டுபோகும்விதத்தைக் குறித்து சிலமாதங்களுக்கு முந்தி தாஞ்சாவூர் ஜில்லாக்கூட்டத்தில் கண்டனஞ்செய்து பேசப்பட்டது. இந்த கான்பரன்ஸ் சுட்டிக்காண்பித்த புகாரைப்பற்றி கவர்ன்மெண்டார் விசாரணைசெய்தார்களா? தென்னிந்திய கூலிக்காரர்கள் கால் நடைகள்போல விற்பனை செய்யப்பட்டுவருகிறார்கள் என்று எழுதப்பட்டிருப்பதை கவர்ன்மெண்டார் பார்த்திருக்கிறார்களா? பொய் புறட்டுகள் கூலிகளுக்குச்சொல்லி தீபாந்திரத்திற்கு செல்லும்படி தூண்டப்படுகிறார்களென்று ஜில்லா ஆபீசர்கள் மூலியமாக கவர்ன்மெண்டார் கேள்விப்பட்டதில்லையா? மனிதன், ஸ்திரீ, குழந்தை முதலாயினோர் பொய்யும் புறட்டுமான ஆசைகாட்டப்பட்டு அவர்களுடைய இஷ்டத்திற்கு விரோதமாக தீபாந்திரங்களுக்கு ஏற்றப்பட்டுவருகிறார்கள் என்றால் தீபாந்திரங்களுக்கு

கூலிகள் ஏற்றும் விதம் ஒழுங்காய் நடந்துவருகிறதென்றும் கவர்ன்மெண்டார் திருப்தியடைய நியாயமுண்டோ? கூலிகளுக்கு அன்னியபிராந்தியங்களில் எவ்வளவு நன்மைகள் கொடுக்கப்படுகின்றனவோ அவ்வளவு நன்மைகளும் இவ்விடமில்லாமலில்லை. அதைப்பற்றி நான் அவசியமாகப் பேச வேண்டியதில்லை. கூலிகளைத் தீபாந்திரங்களுக்குச் செல்லும்படியாகவிடுவதால் உண்டாகக்கூடிய தீமைகளை நான் எடுத்துச்சொல்லவும் வேண்டுமோ? நெருளடர்ந்த கிராமங்கள் காலியாகிவருகின்றன. நிலங்கள் சாகுபடி செய்யப்படாமல் தரிசாய்க்கிடக்கின்றன. மராமத்து இலாக்காக்காரர்கள் தங்கள் இலாக்காவிற்கு சாங்கிஷன் செய்யப்பட்டபணத்தை செலவுசெய்து வேலை ஆரம்பிக்க கூலிக்காரர்கள் அகப்படாமல் தவிக்கிறார்கள். போக்குவரத்து வசதிகள் செய்வதும், ஆஸ்பத்திரி விருத்திவிஷயங்கள், தபால் சௌகரியங்கள் ஆகிய இவைகளுக்கெல்லாம் மேல் விவசாய கூலிகள் சம்பந்தமான பிரஸ்னை முக்கியமானது. சின்கோனபயிர்செய்வது சம்பந்தமாக கவர்ன்மெண்டார் எடுத்துக்கொள்ளும் பிரயாசைகளைப்பற்றி இப்போது நான் பிரஸ்தாபிக்காமல் போனபோதிலும் கவர்ன்மெண்டார் நிபுணர்களைத் தருவித்து சாஸ்திரபூர்வமாக பயிர்செய்யும்படி போதிக்கச்செய்த உதவிக்காக அவர்களுக்கு வந்தனம் சொல்லாமல் நான் என்பேச்சை முடிவுக்குக்கொண்டுவருவது பொருந்தாது.'' என்று பேசினார்.

நீர்ப்பாய்ச்சல் வசதிகள்.

ஆனரபில் மிஸ்டர் B. N. சர்மா:—இவ்விராஜதானியின் பொருளாதார நன்மையை விருத்திப்படுத்தும் விஷயத்தை முன்னைவிட இன்னும் அதிகமாக கவர்ன்மெண்டார் கவனித்துவரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளாமலிருக்க முடியவில்லை. உதகமண்டலத்தில் கூடிய கைத்தொழில் சங்கம் செய்த சிபார்சுகள் கவனிக்கப்பட்டால் கைத்தொழில் சம்பந்தப்பட்டவரையில் நம் ராஜதானி கூடியவரையில் வெகுசீக்கிரம் பிரபலம் அடையும். மொத்தத்தில் கையிருப்பு அதிகமாயிருக்கிறதென்று கவர்ன்மெண்டார் சந்தோஷப்படுகிறார்கள். நீர்ப்பாய்ச்சல் வசதிகளை விருத்திப்படுத்தவும், போக்குவரத்து வசதிகளை பெரும்பாலும் கிராமாந்திரங்களில் விருத்திபடுத்தவும், அந்த கையிருப்பின் ஓர் பாகம்பிரயோகப்படுத்தப்படலாம். விசேஷவிருத்திகள் உண்டானால், சிப்பந்திச் செலவுகளையும் அதிகப்படுத்தலாம். அவசியமான வேலைகளை சீக்கிரம் ஆரம்பிக்கும்படியான சக்தி உண்டாகும்படி மராமத்து இலாக்கா மறுபடியும் விருத்திபடுத்தப்படவேண்டும். நீர்ப்பாய்ச்சல் விருத்தியும், இருப்புப்பாதை விருத்தியும் மிகவும் தாமதமாக நடந்துவருவது நம்முடைய துர் அதிர்ஷ்டம். இவைகள் விஷயமாக இன்னும் விசேஷ விருத்திசெய்யப்படக்கூடியதாயிருந்தபோதிலும் இந்தக் குறைக்கு மாகாண கவர்ன்மெண்டாரை முழுதிலும் உத்திரவாதமாக்குவது தகாது. விசாகபட்டணம் துறைமுகத்தையும், ரேய்ப்பூர், விஜயநகரம் இருப்புப்பாதையையும் கவர்ன்மெண்டார் சீக்கிரம் கட்டிமுடித்துவிட்டால் நலமாயிருக்கும். அப்படி கட்டி முடித்துவிட்டால் மத்திய மாகாணம், பிரார் வியாபாரங்கள் விசாகபட்டணத்திற்கு மாறிப்போய்விடும். சென்னைராஜதானி முழுமைக்கும் பருத்தி எவ்வளவு பயிர்செய்யப்படுகிறதோ அதற்குமேல் அதிகமாக ஷை மாகாணங்களில் பயிர்செய்யப்பட்டுவருகிறது. மீன்பிடிக்கும் தொழிலை விருத்திப்படுத்தி ஜனங்களுக்கு ஆகார சாமான் சப்ளைசெய்ய தென்கரையிலேயும், மேல்கரையிலேயும் தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அதுபோல் கீழ்கடற்கரையிலும் செய்யும்படியும் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பக்கத்திலும் மீன்பிடிக்கும் தொழிலில் புத்திசாலித்தனம் உடையவர்கள் இல்லாமலில்லை என்று பேசினார்.

ஜில்லா போர்டு இருப்புப்பாதைகள்.

ஆனரபில் மிஸ்டர் ராமச்சந்திரராவ்:—ஜில்லாபோர்டு இருப்புப்பாதைகளில் மூலதனம்போடுவதற்காக சில ஏற்பாடுகள் செய்யப்பட்டுவந்தன.

ஒரு துணைக்கம்பெனி ஸ்தாபிப்பதற்காக ஆதியில் செய்யப்பட்டுவந்த யோஜனைரத்தாகி திர ஆரயோஜனை செய்யப்படுவதற்காக பணவிஷயத்தில் அனுபோகமுடைய நிபுணர்கள் உதகமண்டலத்திற்கு தருவிக்கப்பட்டார்கள். அவர்கள் என்ன யோஜனை செய்தார்கள் என்றும், அதன் பேரில்

கவர்ன்மெண்டார் என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிருர்கள் என்றும் இன்னும் தெரியவில்லை. ரயில் இலாக்காவில் போதுமானவண்டிகள் இல்லை என்றும், லோக்கல் கவர்ன்மெண்டார் ஏற்கனவே வாக்களித்தபடி இதுவிஷயத்தைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டாருக்கு அறிவித்தார்களோ இல்லையோ தெரியவில்லை. போதுமான வண்டிகள் இல்லாததால் வியாபார வகுப்பார் கஷ்டப்படுகிருர்கள். கடந்த இரண்டு வருஷமாக இந்தப்புகார் இருந்துகொண்டேயிருக்கிறது.

ஐக்கியநாணய சங்கங்கள்.

ஆனரபில் மிஸ்டர் கிருஷ்ணராவ் :—ஐக்கிய நாணய சங்கங்கள் முன்னுக்குப்போது அதிகமாக விருந்தபோதிலும் அவைகள் எல்லா ஜில்லாக்களிலும் நிரந்தரமாகயில்லை. அனந்தப்பூர், செங்கற்பட்டு ஆகிய இந்த ஜில்லாக்களில் 100 சங்கங்களுக்குமேலிருக்கின்றன. சிலவைகளில் 50-க் குறைவாகவிருக்கின்றன. சிலவைகளில் 10-க் குறைவாகக்கூடவிருக்கின்றன. ஐக்கிய நாணய சங்கங்களைப்பற்றி ஜனங்களுக்குப் போதித்து சங்கங்கள் ஏற்படுத்தும்படி போதுமானபடி இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்படவில்லை.

இப்போது இந்த இராஜதானியில் 972 சங்கங்களிருக்கின்றன. சங்கங்கள் ஸ்தாபிக்க 700 மனுக்கள் வந்திருக்கின்றன. இந்த மனுக்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு 700 சங்கங்கள் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டால் இப்போதிருக்கும் 28-ம் நியமிக்கப்படப்போகும் 16 இன்ஸ்பெக்டர்களும் போதாது. விவசாயவிருத்திக்காகவும் ஐக்கிய நாணயசங்கங்கள் ஸ்தாபிக்க 1912-ம் வருஷததிய இரண்டாவது ஆக்ட் பாஸ் செய்யப்பட்டது. இந்த ஆக்டின்படி விவசாயத்திற்காக சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டிய தவசியம். அப்படி ஸ்தாபிக்கப்பட்டால் இப்போதிருக்கும் சிப்பந்திகள் கொஞ்சங்கூட போதாது என்று சொன்னுர்.

விவசாயப் படிப்பு.

ஆனரபில் மிஸ்டர் A. D. ஜாக்சன் :—ரேவு துறைகளில் சரக்குகள் திருட்டுப்போகிறது ? சரக்கின் சொந்தக்காரர்களுக்கு நஷ்டத்தை விளைவிப்பதுமன்றி அவைகளை வாங்கி ஏற்றுமதி செய்யும் வெள்ளைக்காரர்களுடைய நாணயமும், நம்பிக்கையும் கெட்டுப்போய் அவர்களுக்கு மானசங்கடத்தை விளைவிக்கக்கூடியதாயிருக்கிறது. இது விஷயமாக சென்னையிலிருக்கும் வர்த்தக ஆலோசனை சபையார்கள் கவர்ன்மெண்டாருக்கு தெறியப்படுத்திக்கொண்டிருப்பதை கவர்ன்மெண்டார் அனுதாபத்துடன் கவனிக்க வேண்டிக்கொள்ளுகிறேன். இத்தேசம் விவசாயத்தில் மிகுந்தது. பொருளாதாரம் கொடுக்கக்கூடியது. சாதாரணபடிப்பு விஷயத்தைப்பற்றி இக்கவுன்சிலில் விசேஷமாகப் பேசப்பட்டு வந்ததேயொழிய விவசாயப்படிப்பைப்பற்றி யாதொன்றும் பேசப்படவில்லை. விவசாயப்படிப்பையும் விவசாயத்தொழிலையும் கவர்ன்மெண்டார் விருத்திபடுத்தவேண்டியது மிக அவசிய மென்று வற்புறுத்திப் பேசினுர்.

கைத்தொழிற் படிப்பு.

ஆனரபில் டாக்டர் T. M. நாயர் :—Technical Education என்று சொல்லும்படியான கைத்தொழிற் படிப்பு கற்பிக்கும் பள்ளிக்கூடங்கள் எல்லாம் அப்பள்ளிக்கூடங்களல்ல. இன்ஜினீரிங் கலாசாலையில்கற்பித்துக்கொடுக்கும்படியான படிப்புக்குதான் கைத்தொழிற்படிப்பு என்றுபெயர். இப்பேர்ப்பட்ட பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டு சர்வகலாசாலையுடன் சேர்க்கப்படவேண்டும் நெசவு தொழில் அல்லது பின்னல்தொழில் இன்ஜினீரிங் கலாசாலையில் கொடுக்கப்படும் படிப்புடன் சேர்க்கப்படவேண்டும் என்று சொன்னுர்.

ஆனரபில் றவ்பகதூர் V. K. றமானுஜாச்சாரியார் :—கூலிக்காரர்களையும் அவர்கள் வாங்கிவரும் அட்வான்சுகளையும்பற்றிய பிரஸ்னை மிகவும் கவனிக்கப்படவேண்டும். எமிகிரேஷன் ஏஜண்டுகள் கூலிகளுக்கு தகாதபோதனைகளைச் செய்து அடித்துக்கொண்டுபோய் விடுவதைப்பற்றி பேசினுர். ரயத்துகள் பண்ணைக்காரர்களுக்கு வேண்டியமட்டில் முன்பணம் கொடுத்து உதவி செய்து வைத்திருக்கிருர்கள் என்றும், அப்பேர்பட்ட வேலைக்காரர்களை எமிகிரேஷன் ஏஜண்டுகள் அடித்துக்கொண்டுபோய்விடுவதால் ரயத்துகள் வேலைக்காரர்களை இழப்பதுமன்றி பணத்தையும் இழந்துவுருகி

ருர்கள். விவசாய இலாக்கா டைரக்டராகிய மிஸ்டர் கவுச்சுமான் பண்ணைக்காரர்களுக்கு தகுந்த கூலி கொடுத்து வரும்படி ரயத்துகளுக்கு புத்திசொன்னார். அப்போதனையின்படி நடந்தும் கூலிக்காரர்கள் திருந்தினபாட்டைக் காணோமென்று சொன்னார்.

ரோடுகளும், இருப்புப் பாதைகளும்.

ஆனரபில் மிஸ்டர் சோமசுந்திர செட்டி :—ருமநாதபுரத்திலிருக்கும் நாங்களும் இருப்புப்பாதைக்காக செஸ்வரிகொடுத்து வருகின்றோம். அப்படியிருந்தும் ஜில்லா போர்டு ரெயில்வே எங்களுடைய ஊர்களுக்குப் போடப்படவில்லை. தஞ்சாவூர் ஜில்லா போர்டு ரெயில்வே அறந்தாங்கியில் முடிகிறது. அதாவது ருமநாதபுரத்தின் வடபாகத்தில் முடிகிறது. அதனுடன் தொடர்ந்தேர்த்தியாக ருமநாதபுரத்திற்கும் ரயில்போட்டு விடுகிறதென்று யோஜனை செய்யப்பட்டபோதிலும் அந்த யோஜனை இன்னும் நிறைவேருமலிருக்கிறது.

திருச்சினப்பள்ளிக்கும் ருமநாதபுரத்திற்கும் பிரத்தியேகமாக ஒரு இருப்புப்பாதை போடுவதாகவும் ஒரு யோஜனை செய்யப்பட்டது. இன்னும் அதுவும் போடப்படவில்லை. ஜனங்கள் ரொம்பவும் கஷ்டமடைகிருர்கள். மேலும் அறந்தாங்கி ரயிலடிக்கும் தேவகோட்டைபோலொத்த விடங்களுக்கும் ரஸ்தாமார்க்கங்கள் ஒழுங்காயிருமலிருப்பதாலும் கஷ்டமடைகிருர்கள். சாதாரணவியாபாரிகளும், நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களும் தமிழில் வைத்துவரும் கணக்குகளைப் பரிசோதித்து சர்ட்டிபிகேட் கொடுக்க யோக்கியதையுடைய (chartered accountants) என்று சொல்லும்படியான கணக்கு பரிசோதகர்கள் உத்தியோகத்திற்கு, நம்பாலியர்கள் தற்புத்தி செய்யப்படவேண்டுமென்று சொன்னார்.

கவர்ன்மெண்டு மெம்பர்கள் சொன்னபதில்.

ஐக்கிய நாணயசங்கங்களும் விவசாயமும்.

ஆனரபில் மிஸ்டர் பட்டர்வொர்த் :—ஐக்கிய நாணய சங்கங்களை சில மெம்பர்கள் நினைப்பதுபோல கவர்ன்மெண்டார் நம்பாமலில்லை. அவைகளில் மிகவும் கவலை எடுத்துக்கொண்டு அனுதாபத்துடன் விருத்தி செய்து வருகிருர்கள். விவசாயப்படிப்பும் கடந்த இரண்டுவருஷகாலமாக கவனிக்கப்பட்டுவருகின்றது.

ஜில்லா போர்டு ரெயில்வேகள்.

ஆனரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் :—திருத்துரைப்பூண்டி—வேதாரணியம், நீடாமங்கலம்—மன்னார்குடி இருப்புப்பாதைகள் சம்பந்தமாக கவர்ன்மெண்டார் தென் இந்தியா ரெயில்வேகம்பெனியாருடன் உடன்படிக்கை செய்து முடித்துவிட்டார்கள்.

துறை முகங்களில் திருட்டு.

ஆனரபில் சர் H. ஸ்டுவேர்ட் :—கூடலூர் துறைமுகத்தில் திருட்டுப் போனதாகமட்டிலும் கவர்ன்மெண்டாருக்கு ரிபோர்ட் செய்யப்பட்டிருக்கிறது; இதைப்பற்றி கிரமப்படி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ரிப்போர்ட் செய்வார்.

ஜில்லா போர்டு ரெயில்வே.

மன்னார்குடி திருத்துரைப்பூண்டிபாதை இப்போது போடப்பட்டுவருகிறது. முடிந்தவுடன் திருத்துரைப்பூண்டி வேதாரணியம் இருப்புப்பாதை ஆரம்பிக்கப்படும். திருச்சங்கோடு—திருநெல்வேலி பொன்னலூர்—பொன்னுணி, சூரமங்கலம்—சேலம்—ஆகிய இந்த இருப்புப்பாதைகள் போடும்படி இந்தியா கவர்ன்மெண்டாருக்கு யோஜனை அனுப்பப்படும். பன்ருட்டி, திருச்சி, ருமநாதபுரம் இருப்புப்பாதை ஷெஜாப்தாவில் சேர்க்கப்படாதது ஆச்சரியமாக விருக்கலாம். ஆயினும் இந்தவருஷ அந்தத்திலேயே அதற்கு வேலைகள் ஆரம்பிக்கப்படலாம். பிரத்தியேககம்பெனியார் ஏற்பட்டு இந்தஇருப்புபாதையைப் போடுவார்கள். விருதுப்பட்டி—ருமநாதபுரம், விருதுப்பட்டி—தென்காசி, இருப்புப் பாதைகள் இந்தவருஷம் ஆரம்பிக்கப்படமாட்டா; இந்த பாதைகளுக்கும் பிரத்தியேக கம்பெனியார்கள் ஏற்பட்டால் மிகவும் நன்ருயிருக்கும். சுதேசிகள் இந்தக் கம்பெனிகளில் பங்கு எடுத்துக்கொண்டால் நலமாயிருக்கும் என்று சொன்னார்.

MADRAS MARKET REPORTS.

சென்னை மார்க்கட் ரிபோர்ட்டுகள்.

23rd April, 1913.

MADRAS.

மதுரூஸ் சீமை ஜவுளி வியாபாரம்

தற்சமயம் வியாபாரம் கொஞ்சம் மெதுவாக நடக்கிறது. சென்ற வருஷத்தில் இதே மாசத்தில் வியாபாரம் ரொம்பவும் திருப்தியாக நடந்தது காரணம் என்னவெனில் சரியான வெள்ளான்மை இல்லாமையே. இன்னும் ஒருவாரத்தில் நல்ல வியாபாரம் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(Grey Shirtings.)

கோரா காடா.

41 இஞ்கி (நீட் 14 × 12; 16 × 12) 37/37½ கெஜம் தற்சமயம் ரொம்ப கிருக்கியாய் இருக்கிறது 45 இஞ்சி பட்டைகுறி காடா தினுசுகள் மார்க்கெட்டில் கொஞ்சம் தேவைக்குமேல் அதிகமாக ஸ்டாக்கில் இருக்கிறது 41"—யென்னூர் குறிகாடா ஒஸ்தி தினுசுகள் கைவசம் அதிகமாக இருக்கிறது: ஷையார் மட்டதினுசுகள் டிமாண்டாக இருக்கிறது.

(Grey Jaconets and Mulls.)

கோற ஜாகினேட்-மல்.

தற்சமயம் ஸ்டாக்கு குறைவாக இருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் சரக்குகள் ஏற்றுமதியாய் வரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

(Grey Dhotees.)

மடி தினுசுகள்.

மிகத் தூண்டுதல்பேரில் சொற்பவியாபாரம் நடந்தது. மல்கள் எதிர் பார்க்கப்படுகின்றன.

(White Mulls.)

சலவை மல்கள்.

(Prints)

சீட்டிகள்.

உள்ளூர் கேள்வி சுறுசுறுப்பாயில்லை. கையிருப்பு சேர்ந்துக்கொண்டிருக்கின்றன.

தோல்.

மானு.

போன ஏலம் முதற்கொண்டு ¼ பென்னி எத்தம்; ஏலத்துக்கு வைத்ததில் ¾ பாகம் செலவாய்விட்டது. போக இருப்பு 50,000. இவ்விடத்தில் எல்லா மானுக்களுக்கும் விலை குறைந்திருக்கிறது. போன வாரத்தில் வடகரை மானுவுக்கு விலை ஏத்தமா யிருந்தது. இந்த வாரத்தில் அதற்குங்கூட விலை குறைந்து வருகிறது. சீமை விலைக்கும் இவ்விடத்திய விலைக்கும் சட்டுபடியாகாததினுல் ஆபீஸ்காரர்கள் விலை குறைந்து வாங்க உத்தேசிப்பார்கள் போல இருக்கிறது.

		Rs. A. P.		Rs. A. P.
ஐதராப்பாக்கம்	...	0 14 7	to	0 14 9
பல்லாரி	...	0 15 0		
ஓசைப்பெட்டை	...	0 14 6		
A 1 வடகரை	...	0 14 1	to	0 14 3
மட்டுவாடா (கொழுப்பு).		0 14 1		
பெங்களூர்	...	0 13 5	to	0 13 6
சீவரம்	...	6 12 6	to	0 12 7
பல்லாவரம் (சுத்தம்)	...	0 12 4	to	0 12 6

ஏறு

மெத்த மந்தமாயிருக்கிறது.

பெங்களூர் (பிரைம்)	...	0 10 10		
பெங்களூர் (சாதாரணம்).		0 10 7	to	0 10 8
வடகரை	...	0 10 6		
சீவரம்	...	0 10 2	to	0 10 3
ஐதராபாக்கம் / மட்டுவாடா	...	0 9 9	to	0 10 1

வேனு.

சீமை ஏலம்.

எல்லா சரக்குக்களுக்கும் டிமாண்டு நன்று யிருக்கிறது. லேசு எடை சரக்குகளுக்கு டிமாண்டு நிதானமாயிருக்கிறது. எல்லா சரக்குகளும் போன ஏலம்போல் விற்று யிருக்கிறது. எடையுள்ள சரக்குகளுக்குமாத்திரம்போன ஏலம்முதல் ½ பென்னி

எத்தம். இவ்விடத்தில் விற்பனைக்குறிய வேனுக்கள் பெரும்பாலும் கிடையாது.

ஐதராபாக்கம்	...	1 9 6

சேனு.

எல்லா சரக்குகளுக்கும் கேள்வி இருக்கிறது. ஆசாமிகளிடத்திலிருந்து பரம் ஆபர்களும் வாங்கப்பட்டிருக்கின்றது. சில சரக்குகள் மாத்திரம் போன விலைபோல் தீர்ந்திருக்கிறது. லேசு எடை சரக்குகள் சிங்கப்பூர் வேலை செய்பவர்களும் பயிண்டுவேலை செய்பவர்களும் விலை ரூபாய் 2 கொடுத்து வாங்குகிறார்கள். மற்றபேர்களுக்கு அவ்வளவு விலைகொடுத்துவாங்கக் கட்டாது. இவ்விடத்தில் மெத்தவும் மந்தமாயிருக்கிறது. தற்காலம் இவ்விடத்தில் $1\frac{1}{2}$ லட்சம் இருப்பு இருக்கக்கூடும்.

பல்லாரி	...	1 11 0 to 1 11 3
கோஸ்கி	...	1 15 0
உமராவதி	...	1 15 0
ரேச்சூர்	...	1 6 3 to 1 6 6
உடுமல்பேட்	...	2 0 0
ஐதராபாக்கம்	...	1 4 0 to 1 5 0

உப்பு வேனு.

வரத்து நிதானம். முக்கியமான வரத்துகள் நார்த் வெஸ்டரன் தோல்களும் ஐதராபாக்கத்து பக்கத்து தோல்களும்தான். ஏலம் சமீபத்தில் இருக்கிறபடியால் ஷாப்புக்காரர்கள் வாங்க நிதானிக்கிறார்கள். போட்டியின்பேரில் ஐதராபாக்கத்து பக்கத்துதோல்களுக்கு போனவாரத்துக்கு இந்தவாரம் 5 ரூபாய்கூட தீர்ந்து யிருக்கிறது.

ஐதராபாக்கமும் அதன் சமீபமும்	...	ரூபாய்	130 முதல் 185
ஜபல்பூர்	...	,,	170
பெரம்பூர்	...	,,	170
உஜ்ஜீன் எடையுள்ள சரக்கு	...	,,	190 முதல் 200

உப்பு சேனு.

வரத்து நிதானம். விலை போனவாரம்போல்தான் இருக்கிறது: சிகப்பு சேனு 3 முதல் 5 ரூபாய் கம்மியாய் தீர்ந்திருக்கிறது.

குரும்பை	...	...	ரூபாய்	60	முதல்	70
சிகப்புசேனு	...	...	,,	75	,,	80
ஆவாரம் பட்டை		...	,,	30	,,	34
கொன்னப்பட்டை		...	,,	17	,,	81
கடுக்காய்		...	ரூபாய்	30	முதல்	32
புங்க எண்ணெய்		...	,,	85	,,	90

1913ளு எப்பிரல்மீ 12உ.

சில்லரைக்கடைவிலை.

		Rs.	A.	P.
பச்சரிசி மூட்டை 29 படி கொண்டது கிரயம்	....	8	4	0
புழுங்கல் அரிசி 32 படி கொண்டது கிரயம்	...	8	0	0
தொவரம்பருப்பு படி 1-க்கு	...	0	3	6
தொவரை படி ,,	...	0	3	0
பயத்தம்பருப்பு படி ,,	...	0	4	6
பச்சபயிர் படி ,,	...	0	3	0
உளுத்தம்பருப்பு படி ,,	...	0	5	0
உளுந்து படி ,,	...	0	3	0
கடலைப்பருப்பு படி ,,	...	0	2	9
கடலை படி ,,	...	0	2	3
கோதுமை ரொய் படி ,,	...	0	4	0
கோதுமை மாவு படி ,,	...	0	2	6
எள்ளு படி ,,	...	0	6	0
கொள்ளு படி ,,	...	0	2	0
மொச்சை படி ,,	...	0	5	0
மிளகாய் வீசை 1-க்கு	...	0	6	0
புளி வீசை ,,	...	0	3	0
தனியா வீசை ,,	...	0	4	0
வெந்தியம் வீசை ,,	...	0	6	0
கடுகு வீசை ,,	...	0	6	0
வெங்காயம் வீசை ,,	...	0	1	3
வெள்ளபூண்டு ,, ,,	...	0	6	0
சர்க்கரை பூரா வெள்ளை வீசை 1-க்கு	...	0	6	0
,, பழுப்பு வீசை 1-க்கு	...	0	5	0
வெல்லம் வீசை 1-க்கு	...	0	4	6
மஞ்சள் ,, ,,	...	0	9	0
பாக்கு ,, ,,	...	1	4	0
பீட்டின் பாக்கு வீசை 1-க்கு	...	1	12	0
கற்கண்டு வீசை 1-க்கு	...	0	12	0
பாதாம் கொட்டை வீசை 1-க்கு	...	0	14	0
முந்திரிப்பருப்பு ,, ,,	...	1	0	0
சுக்கு வீசை 1-க்கு	...	1	0	0
மிளகு ,, ,,	...	1	4	0
சீரகம் ,, ,,	...	1	0	0
நெய் ,, ,,	...	2	2	0
நல்லெண்ணெய் வீசை 1-க்கு	...	0	12	0

	ரூ. அ. பை.
விளக்கெண்ணெய் ,, ,, ...	0 8 0
தேங்காய் எண்ணெய் வீசை 1-க்கு ...	0 15 0
பட்டாணி படி 1-க்கு ...	0 3 0
பேரீச்சம்பழம் வீசை 1-க்கு ...	0 6 0
குண்டு காப்பிக்கொட்டை வீசை 1-க்கு.	2 6 0
தட்டை காப்பிக்கொட்டை ,, ,, ...	1 14 0

1913௵ ஏப்பிரல்௴ 23௳

	ரூ. அ. பை.
பச்சரிசி மூட்டை 29 படிக்கு கிரயம் ...	8 4 0
புழுங்கல் அரிசி மூட்டை 32 படிக்கு..	8 0 0
தொவரம்பருப்பு படி 1-க்கு ...	0 4 0
தொவரை ,, ,, ...	0 3 3
பயத்தம் பருப்பு ,, ,, ...	0 4 6
பச்சபயிர் ,, ,, ...	0 3 0
உளுத்தம்பருப்பு ,, ,, ..	0 5 0
உளுந்து ,, ,, ...	0 3 0
கடலைபருப்பு ,, ,, ...	0 2 6
கடலை ,, ,, ...	0 2 0
கோதுமை நொய் ,, ,, ...	0 4 0
கோதுமை மாவு ,, ,, ...	0 2 6
எள்ளு ,, ,, ...	0 6 0
கொள்ளு ,, ,, ...	0 2 0
மொச்சைகொட்டை படி 1-க்கு ...	0 2 6
மிளகாய் வீசை 1-க்கு ...	0 6 0
புளி ,, ,, ...	0 3 3
தனியா ,, ,, ...	0 4 0
வெந்தியம் ,, ,, ...	0 6 0
கடுகு ,, ,, ...	0 6 0
வெங்காயம் ,, ,, ...	0 1 3
வெள்ளைபூண்டு வீசை 1-க்கு ...	0 6 0
வெல்லம் ,, ,, ...	0 3 9
வெள்ளை பூரா சர்க்கரை வீசை 1-க்கு.	0 6 0
நாட்டு சர்க்கரை பழுப்பு ,, ,, ...	0 4 0
மஞ்சள் வீசை 1-க்கு	0 6 0 to 0 9 0
பாக்கு ,, ,, ...	1 4 0
பீட்டின்பாககு வீசை 1-க்கு	1 10 0 to 1 12 0
கற்கண்டு வீசை 1-க்கு ...	0 12 0
பாதம் கொட்டை வீசை 1-க்கு ...	0 12 0
முந்திரிபருப்பு ,, ,, ...	1 0 0
சுக்கு ,, ,, ...	1 0 0
மிளகு ,, ,, ...	1 2 0
சீரகம் ,, ,, ...	1 0 0
நெய் ,, ,, ...	2 2 0
நல்லெண்ணை வீசை 1-க்கு	0 12 0 to 0 14 0
விளக்கெண்ணை ,, ,, ...	0 8 0
தேங்கா எண்ணை ,, ,, ...	0 15 0
பட்டாணி படி 1-க்கு ...	0 3 0
பேரீச்சம் பழம் வீசை 1-க்கு ...	0 6 0

Letters to the Editor.

M. A. அயாத் பாட்சா சாயபு கம்பெனி.

சென்னை வியாபாரியின் கனம்பொருந்திய எடிட்டர் அவர்களுக்கு அடியிற்கண்ட கடிதத்தில் தங்களுடைய "வியாபாரியில்" பிரசுரிக்க வேண்டுகின்றேன்.

பெங்களூரிலும் பல்லாவரத்திலும் தோல் ஷாப்பு வைத்து அபரிமிதமாய் வேலை செய்து வருபவர்களும் சீமை வியாபாரஞ் செய்பவர்களுமாகிய M. A. அயாத்பாட்சா சாயபு கம்பெனியார் இதுவரையிலும் ஆபீஸ்வேலை நடத்திவந்த ஸெயிண்ட் லயின்பீச் கட்டிடத்துடன் அண்டையிலுள்ள கட்டிடங்களையும் ஒன்று சேர்த்து கிட்டதட்ட லட்சம் ரூபாய் சிலவு செய்து விமரிசையாய் கட்டிமுடித்து 21உ திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கிரகப்பிரவேசம் செய்தார்கள். இந்த சுபசமயத்தில் வந்திருந்த வியாபாரிகளையும் சிநேகிதர்களையும் வெகு வாஞ்சையுடன் வரவேற்றி மிக விமரிசையாய் சந்தன புஷ்பதாம்பூலம் முதலியவைகள் கொடுத்து உபசரித்து அனுப்பினது சந்தோஷமாயிருந்தது. இதற்கு முன்தினம் வேலைக்காரர்களுக்கு தகுந்த படி உண்டி முதலியவைகள் உதவி வேஷ்டிகள் கொடுத்ததும் சந்தோஷப்படத்தக்கதே! இது M. A. அயாத் பாட்சா சாயபு குடும்பத்திற்கே இயற்கையாயுள்ள குணாதிசயம். ம-௱-௱-ஸ்ரீ எம். ஏ. அயாத்பாட்சா சாயபு அவர்கள் பரோபகார விஷயங்களுக்கு தருமஞ் செய்ய பின் வாங்காத்தீரர். அனேக காலமாய் தோல் வியாபாரத்திலும் பீஸ் கூட்ஸ் வியாரத்திலும் மிக தேர்ச்சியுடையவர். மிகவும் கியாதி பெற்றவர். இவர் செய்யும் வியாபாரம் மேன்மேலும் ஓங்கவேணடுமென்றும் குபேரசம்பத்துடனும், தீர்காயுசுடனும் அவர் வாழ்ந்து வரவேண்டுமென்று கடவுளை பிரார்த்திருக்கிறோம். இத்துடன் இவரை கருடன் இரக்கையைப்போல் சூழ்ந்து தகுந்தபடி நிர்வகித்துவரும் ம-௱-௱-ஸ்ரீ பி. என். முத்துசாமி நாயுடு, பீ.ஏ., அவர்களுக்கும், ஆர். திருமலசாமி நாயுடு அவர்கட்கும் வந்தனம் செய்யகடமைப்பட்டிருக்கிறோம்.

R. M.